பாசாசு

432

19-11-48

பொங்கல் பரிசு

ஆடுவோமே
இருவர் நாமே



AVM ப்ரொடக்ஷன்ஸ்

நாம் இருவர்

டைரக்ஷன்

AV. மெய்யப்பன்

அசோஸியேட் டைரக்ஷன்

M.V. ராமன் & ப. நீலகண்டன்

கதை வசனம்

ப. நீலகண்டன்

G.H. RAO

காரைக்குடி **ஏவி. எம். ஸ்டுடியோவில்** தயாரானது

பாசரஸ்

22

... OF THE REGISTRAR OF BOOKS
24 FEB 1947
MADRAS

பதிப்பாசிரியர்கள்

எம். எஸ். பாசு

ஸ்ரீமதி சாருவதி பாசு

BASARAS KARYALAYAM

45-46, Armenian St., : : Madras 1

Phone 4037

குறைந்த விலையில் பல ரகங்கள்

மதராஸிலும் மற்ற ஜில்லாக்களிலும் உள்ள கூட்டுறவு சங்கக் கடைகளில் சரக்குகள் வெகு சீக்கிரம் விற்பனையாகின்றது. புதிய புதியதாய் அப்பொப்பொழுதுள்ள பாஷனுக்குத் தகுந்தபடி சரக்குகள் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஒரு சிரமமுமில்லாமல் உங்கள் தேவைக்கு சரியானவைகளை எங்களிடமிருக்கும் பலவித ரகங்களில் வாங்கிக்கொள்ளலாம்.

மதராஸ் கூட்டுறவு கைத்தறி துணிகள் வாங்குவதில், நீண்டகால உழைப்பு, கடைசிவரை அழகு, சோபை, அன்றாட உபயோகத்தின் நன்மை, இவைகளைத்தவிர நேராக உங்களுக்கு விற்கப்படுவதால், இதர வியாபாரிகள் லாபத்தைப் போக்கி, குறைந்த விலையில் கிடைப்பதை மறந்து விடாதீர்கள்.

கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான் வேஷ்டிகள் புடவைகள் சட்டைகள் டவல்கள் பிரின்ட்ஸ் கிங்கம்ஸ் சின்ட்ஸ் விடு அலங்கரிக்கத் துணிகள் மேஜை துணிகள் படுக்கை விரிப்புகள் கைக்குட்டைகள் லுங்கிகள் அங்கவஸ்திரங்கள் கொசுவலைகள் க்வில்ட்ஸ் தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரொவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A, உட்ஸ் ரோட், மவுண்ட் ரோட், P.O.,
மதராஸ்.

இந்த இதழில்

பக்கம்

பொங்கல் வாழ்த்து	5
நிம்மதி	7
கனவுப்பாலம்	17
தங்க ஒட்டியாணம்	21
மன நூல்	31
குழந்தை மனம்	35
கலைஞன் காதல்	42
வாழ்க்கைப் பாதை	47

தனிப் பிரதி

விலை அணா 8.

ஒரு வருடத்திற்கு ரூ. ஆறு.

NK7-22

எல்லா உரிமைகளும்
பதிப்பாசிரியர்களுக்கே

கட்டுரைகளில் வெளியாகும் அபிப்பிராயங்கள் பதிப்பாசிரியர்களின் அபிப்பிராயங்களல்ல.

அட்டைப் படம்

"நாம் இருவர்" என்ற சமூகப் படத்தில் முதல் முறையாகத் தோன்றியதுமே புகழ் அடைந்து விட்ட

ஸ்ரீமதி டி. எ. ஜெயலக்ஷ்மி

208426

'கலை'யுலகில் ஓர் அற்புதம்!

★ **கலை** ★

மலர் வெளி வருகிறது.
மிகப் பெரிய அளவில்
கலர் படங்களுடன்
சித்திரை மாதத்தில்
வெளி வருகிறது.

☆

தனிப்பிரதி ரூ. 6—0—0.
தபாலில் ரூ. 6—8—0.

இப்பொழுதே முன் பணம் அனுப்பி
உங்கள்பிரதியை நிச்சயித்துக்கொள்ளுங்கள்.

பாசராக் காரியாலயம்
45-46, அரண்மனைக்காரத் தெரு
சென்னை

பொங்கல் வாழ்த்து

ஆர். ஜெயலக்ஷ்மி

★

பண்டைத் தமிழரின் பண்புகள் யாவும்
எண்டிசை யகத்தும் இனிதின் ஓங்கவும்
நிலவளம் சுரக்கவும் மழைவளம் பெருகவும்
விலைநலம் மலியவும் கலைநலம் ஓங்கவும்
தமிழ்ப்பெரு நாளெனத் தரணியோர்
[போற்றும்
தமிழர்தம் ஆண்டுத் தைமுதற் றிங்களில்
பொங்குக பொங்கல்! பொங்குக பொங்கல்!!
நங்கள் தம்நாடு நலம்பெற் றோங்கவே
பொங்குக பொங்கல்!!! பொங்குக பொங்கல்!!!!

ஸுபா

Hoe & Co.

General Printers
and
Specialists in Offset
POSTER PRINTS

PHONE: 3712
MADRAS

இந்த ஈரல் குலை கட்டி
வியாதியை ஜம்மியின்
"லிவர்க்யூர்" தான் நிச்சய
மாக குணப்படுத்தும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்
மைலாபூர் :: :: மதருஸ்

நிம்மதி

க. பஞ்சாபகேசன்

ஜன்னல் கம்பிகளை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டி ருந்த அவளுடைய கைகள் சர்ரென்று நழுவி, புஜ பல வீனத்தினால் கீழோரத்துக்கு வந்துவிட்டன. அதற்குப் பிறகு இன்னதென்று வருணிக்க முடியாத ஒரு பெருமூச் செறிந்தாள். மேஜை எதிரேயிருந்த நாற்காலியண்டை போய் அதில் அமர்ந்தாள். எதிரே விரித்துக் கிடந்த புஸ்தகத்தின் மேல் கண்களைத் திருப்பினாள். மறுபடியும் பெருமூச்சு. மேஜையின் மேல் இன்னும் முடிக்கப் பெறாத ஒரு கதையின் பிரதி காக்ஷியளித்தது. இன்னொரு பெருமூச்சு. நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டே எழுந்தாள். 'கிரீச்' என்ற சப்தம்.

எதையோ முணுமுணுத்துக்கொண்டு அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக சிறிது நேரம் நடந்தாள். நிம்மதி இழந்திருந்த அவளுடைய நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து அநேக முணுமுணுப்புகள். 'இன்றைக்கு நான் ஏன் இப்படியிருக்கிறேன்? காரணமேயில்லாமல் ஏன் எனக்கு இன்றைக்கு இப்படி கோபம் உண்டா கிறது? லவலேசமும் நிம்மதியில்லாமல் ஏன் இருக் கிறேன்?' — இப்படி அநேக கேள்விகளைத் தன்னையே கேட்டுக்கொண்டாள். ஆனால் அவளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை!

"செல்லம்! செல்லம்!"

ஆமாம். அவளைத்தான் கூப்பிட்டார்கள். கதவின் பக்கம் திரும்பினாள். கலீரென்ற சிரிப்பு ஏககாலத்தில் அவளுடைய மூன்று தோழிகளுடைய கண்டங்களிலிருந்

தும் கிளம்பியது. அவள் வயிற்றெரிச்சலைக் கிளப்பி விட்டது அவர்களுடைய சிரிப்பு.

"என்னடியம்மா கண்டுவிட்டீர்கள்? விழுந்து விழுந்து சிரிக்கிறீர்களே?"

ரொம்பவும் ஆக்ரோஷத்துடன்தான் செல்லம் பேசினுள். அவளுடைய நிம்மதியற்ற நிலை அவளுக்குத் தானே தெரியும்?

தோழிகள் மூன்று பேரும் உள்ளே வந்தார்கள். ஒருத்தி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள்; ஒருத்தி மேஜை மேல் அமர்ந்துகொண்டாள்; ஒருத்தி ஜன்னல் பக்கத்தில் ஒட்டியிருந்த சிறு இடத்தில் ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டாள்.

"எந்தக் கதையைப் பற்றிய யோஜனையோ?" என்று கேட்டாள் ஜன்னல் பக்கம் இருந்தவள்.

"கதையா? கதையை யாரடீ கண்டா, லக்ஷ்மி?" என்றுள் செல்லம்.

நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தவள், 'உனக்குத் தெரியலே, லக்ஷ்மி! அவளுடைய சிந்தனு லோகத்திலே நாமெல்லாம் பெரிய பெரிய அசுரர்கள்! இல்லையாடீ, செல்லம்?" என்றுள்.

செல்லத்தின் முகத்தில் கோபரேகை நெளிந்தது. இந்தப் பொல்லாத ஹாஸ்டலில் ஏன் வந்து சேர்ந்தோம் என்றாகிவிட்டது அவளுக்கு. தனியாகச் சிந்தனை செய்ய வழியில்லை; தோழிகளுடைய உபத்ரவத்திற்கும் பரிகாசத்திற்கும் கொஞ்சங்கூடக் குறைவில்லை. திருவல்லிக்கேணியில் அத்தையுடன் போய் இருக்கலாமென்றால், அந்த அத்தை, 'என்னடீ, படிச்சுப் படிச்சுக் கிழிக்கப் போறேள்?' என்று சதா வரட்டு வேதாந்தம் உளறிக்கொண்டேயிருப்பாள்; அத்தானுடைய முறைப்பிற்கும் லக்ஷணத்திற்கும் அவள் கொஞ்சங்கூடப் பிடிகொடுக்க

ஆசைப்படாதவள். ஒரு வகையில் ஹாஸ்டல் வாழ்க்கை அவளுக்குப் பிடிக்காவிட்டாலும், இன்னொரு வகையில் அது ரொம்பவும் தேவலை போலிருந்தது!

"ஆமாம், இப்படியே கதைகள் எழுதிக்கொண்டும், கதைப் புஸ்தகங்களைப் படித்துக்கொண்டும் இருந்து விட்டால் அப்புறம் பரீக்ஷையில் எப்படி பாசாகும்டீ செல்லம்?" என்று கேட்டாள் மேஜை மீது உட்கார்ந்திருந்தவள்.

"நீலா! இன்னும் மூன்று மாசம் கழிச்சு வரப் போகிற பரீக்ஷையைப் பற்றி இப்போதே என் கவலைப்பட வேண்டும்? அதற்குள் நான் நிறைய எழுதிவிடுவேன்; படிக்ககூடச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்வேன்!" என்றாள் செல்லம்.

ஸ்திரீ எழுத்தாளருக்குள் முதன்மை ஸ்தானம் பெற வேண்டும் என்பது செல்லத்தின் பெரிய ஆசை. கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த செல்லம் தன்னுடைய எழுத்துக்கும் சிந்தனைக்கும் தகுந்த பண்பாட்டைக் கொடுக்க வெகு பாடுபட்டுக் கொண்டிருந்தாளாதலால் கல்வி விஷயத்தில் அதிக ஊக்கமும் கவனமும் செலுத்த முடியாமலிருந்தாள்.

செல்லத்தின் தகப்பனருக்கு அவளைப் பற்றி மகத்தான பெருமை. 'மனுஷனுடைய உள்ளச் சித்தனையில் ஒரு ஸ்திரீ வெற்றி பெற்றுவிட்டாள்' என்பதின் பெருமை செல்லத்திற்குக் கர்வம் ஊட்டியிருந்தது; இது போதாதென்று. அவளுடைய தகப்பனரையும் பூரிக்கச் செய்தது அது. இதன் பலன் என்ன? செல்லம் சதா கதைகளும் கட்டுரைகளும் எழுதிக்கொண்டிருந்தது தான்!

அந்தி வேளையாதலால் அறைக்குள் இருள் சூழ ஆரம்பித்தது. செல்லம் 'ஸ்விட்சைத்' தட்டிவிட்டு அறையை ஒளி பெறச் செய்தாள். ஒரு பெரிய ஜமுக்காளத்தை அறையின் நடுவில் விரித்தாள்.

"ஏண்டீ இப்படி நவக்கிரகங்கள் போலே உட்கார்ந்திருக்கணும்? நாலுபேரும் இப்படி, இதன் மேலே உட்கார்ந்துண்டு பேசலாமே?" என்று செல்லம் சொல்லவும் எல்லோரும் ஜமுக்காளத்தில் உட்கார்ந்துகொண்டார்கள்.

"செல்லம்! நேற்று 'பீச்சு ஸ்டேஷன்' போயிருந்தாயல்லவா? அத்தை வேஜில் உன்னை விட்டிருக்கமாட்டாளே?" என்றாள் நீலா.

"ஆமாம். அத்தை தாம்பரத்துக்குப் போனாள். அவளைக்கொண்டு விடத்தான் போனேன். ஆனால்...... நீலா......அங்கே நான் பார்த்தது......," என்று சொல்லி செல்லம் பேச்சை நிறுத்தினாள். பாக்கி மூன்றுபேரும் தங்கள் புருவங்களை நெறித்தவண்ணம் செல்லத்தை நிமிர்ந்து பார்த்தார்கள்.

நிம்மதி இழந்திருந்த செல்லத்துக்குத் தன்னுடைய நிலைக்குக் காரணம் க்ஷணத்திலே விளங்கிவிட்டது. ஆமாம். 'பீச்சு ஸ்டேஷனில் நடந்ததை அடியோடு அவள் மறந்து விட்டிருந்தாளானாலும், அதன் எதிரொலி அவள் உள்ளத்திலிருந்து இன்னும் அழிந்து விடவில்லை. அவளும் நிம்மதி அடையவில்லை.

இதமான மாலைக் காற்று ஜன்னல் வழியாக வந்து அறைக்குள்ளே வீசியது. லக்ஷ்மி, "செல்லம் ரொம்ப அதிருஷ்டசாலிதான். சுகமாக காற்று வருகிற அறையாகத் தேடிப் பிடித்துக்கொண்டாள்!" என்றாள். நீலா அவள் வாயை அடக்கினாள்.

"சொல்லு, செல்லம்! பீச்சு ஸ்டேஷனில் நேற்று என்ன நடந்தது?" என்று விஷயத்தைக் கிளறிக் கேட்டாள் நீலா. நிம்மதியற்றிருந்த செல்லத்திற்கு விஷயத்தை யாரிடமாவது கொட்டிவிட வேண்டும் என்ற விருப்பமிருந்தது. ஆகவே சொன்னாள்......

2

செல்லத்தை ஒண்ணும் நெம்பர் நாகரிகப் பிச்சு என்று சொல்ல முடியாது; அசல் கர்நாடக மனுஷி என்றும் அவளைச் சொல்லிவிட முடியாது. நடுத்தரம் அவளுடைய நடையுடை பாவனைகளில் குடிபுகுந்திருந்தது. ஊரிலே கொள்ளை நிலச்சுவாந்தாரராக இருந்த அப்பாவுக்கு அவள் ஒரே பெண்; ஆனால் செல்வச் செருக்கு கிடையாது அவளிடம். இதற்கெல்லாம் காரணம் அவளுடைய படிப்பு என்று மட்டும் சொல்லிவிட முடியாது. விஷயங்களைச் சிந்திக்கிற அறிவும் அவளுடைய எழுத்தாளத்துவ சக்தியும்தான் இதற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும்.

"சதா கதையே எழுதிண்டு இருக்கிறாயா? அல்லது படிப்பு வாசனைக்குக் கொஞ்சமாவது இடம் கொடுக்கிறாயா?" என்று போகும்போதே அத்தை கேட்டாள்.

அவளை யொத்த பெண்ணாக இருந்தால், செல்லம் சூட்டோடு சூடாக பதிலளித்திருப்பாள். ஆனால் அத்தை அவளைவிட வயசில் நிரம்பப் பெரியவள். அதனால் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு சாந்தமாகவே, "நன்னாப் படிக்கிறேன், அத்தை!" என்றுதான் அவளால் சொல்ல முடிந்தது.

இரவு மணி எட்டு. இரண்டு பேரும் பீச்சு ஸ்டேஷனை அடைந்தார்கள். பிளாட்பாரத்தில் மின்சார விளக்குகளின் ஜோதி வெகு அமர்க்களமாக இருந்தது. தாம்பரத்திற்குப் போகவிருந்த வண்டியில்—பெண்கள் வண்டியில்—அத்தையை ஏற்றிவிட்டு தான் பிளாட்பாரத்தில் நின்றபடி அத்தையுடன் பேசிக்கொண்டிருந்தாள் செல்லம்.

அந்தப் பெண்கள்வண்டிக்கு எதிரே சிற்றுண்டி சாலை ஒன்று இருந்தது. அத்தனை நேரமாகியும் அங்கே காப்பிக்காக அடிதடி. அப்பொழுதுதான் செல்லத்தின் சிந்தனையைத் தூண்டிவிட்ட சம்பவம்—சம்பவம் மட்டுமல்ல, ஒரு குட்டி நாடகம்—நடந்தது.

அத்தை கேட்ட கேள்விகளுக்கெல்லாம் என்னமோ ஏதோ என்று பதில் சொல்லிக்கொண்டே, அந்த நிகழ்ச்சி யையும் கூர்ந்து கவனித்தாள் செல்லம்.

பேச்சிலே ஏதோ வொரு காரியாலயத்தைச் சேர்ந் தவள் போலிருந்தது, பாவம்! அலுத்துக் களைத்து வந்தாள் அந்தப் பெண். மாநிறந்தான். வெள்ளைப் புடவை; சிவப்புப்பூ பார்டர் போட்டது. வலது கையில் ஒரு சிறு துணிப் பை. கருப்புப் பிரேம்போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாள். காலில் செருப்பில்லை. செல்லத்தின் கவனத்தை அந்த எளிய உடையோடு காணப்பட்ட மாது மிகவும் கவர்ந்தாள். செல்லத்தின் கவனத்தைக் கவர்ந்தது அவள் உடை மட்டுமல்ல. அடக்க ஒடுக்கத்தோடு தலையைக் குனிந்த வண்ணம் அந்தப் பெண் பிளாட்பாரத்திற்குள் நுழைந்ததே செல்லத் துக்கு முக்கியமாகப் பிடித்துவிட்டது.

சிற்றுண்டி சாலை எதிரே வந்து நின்றாள் அந்தப் பெண். இப்பொழுது செல்லத்திற்கு வெகு அருகில் வந்துவிட்டாள் அவள். உடனே 'பெண்கள் வண்டி யில்' அவள் ஏறிவிடுவாள் என்றே எதிர்பார்த்தாள் செல்லம். ஆனால் அப்படி நடக்கவில்லை. அங்கே நின்ற அந்தப் பெண் சிற்றுண்டி சாலையைப் பார்த்தாள்; பெண் கள் வண்டியையும் ஒரு தடவை பார்த்தாள். அவளு டைய நெற்றியில் முத்து முத்தாக அரும்பியிருந்த வியர் வைத்துளிகளைப் பார்த்த செல்லத்துக்கு அவளுடைய களைப்பு க்ஷணத்திலே புரிந்துபோயிற்று; ஒரு கப் காப்பிக் காக அவள் அங்கு நிற்பதும் ஸ்பஷ்டமாகச் செல்லத்திற்கு விளங்கிவிட்டது.

அத்தை இல்லாமலிருந்தால் அந்தப் பெண்ணுக்குச் செல்லம உதவி செய்திருப்பாள். அங்கே நிலவியிருந்த அந்த அடிதடிக்கு எந்தப் பெண்தான் பயப்பட மாட்டாள்!

அப்பொழுது மின்னல் போல நிகழ்ந்தது அந்தச் சம்பவம். அது ஒரு வகையில் செல்லத்திற்குப் பொறுமை

யாகத்தானிருந்தது! உண்மையில் கதைகளில்தான் அந்த மாதிரிச் சம்பவங்களை அவள் வருணித்திருக்கிருள். இப்போதோ நேரிடவே நடக்கிறது!

ஒரு வாலிபன்—மாணவன் போலிருக்கிறது; கொஞ்சம் மிடுக்காகவே உடை உடுத்தி யிருந்தான்!—அவனுக்கு அந்தப் பெண் விஷயத்தில் அபார ஞானதிருஷ்டி வற்பட்டது போலும்! சில்க் ஷர்ட் கிழிந்து விடுமே என்ற அச்சம் கொஞ்சம்கூட இல்லாமல்—இடித்துப் புடைத்துக்கொண்டு ஒரு கப் காப்பி வாங்கிக்கொண்டு வெளியே வந்தான். அதை நேரே அந்தப் பெண்ணிடம் நீட்டினன்!

நன்றி நிறைந்த கண்களுடன் அவள் அதை வாங்கிக் கொண்டாள். 'மளமள' வென்று குடிக்க ஆரம்பித்தாள். ஆனல் அது ரொம்பவும் சூடாக இருந்ததால் அவளால் மெதுவாகத்தான் குடிக்க முடிந்தது. பொல்லாத வண்டி அவளுக்காக காத்திருந்ததா? அதுதான் கிடையாது; அதுவும் போய் விட்டது.

செல்லம் நகரவில்லே. டம்ளரை வைத்துவிட்டு அந்தப் பெண் நேரே செல்லத்திடம் வந்தாள். மாணவன் இந்த அலக்ஷ்யத்தை நாசூக்காக அலக்ஷ்ய பாவத்திலே அமுக்கிவிட்டு மெல்ல நழுவி விட்டான்!

"மயக்கம் வரும்போலே இருந்தது! நல்ல வேளை சாப்பிட்டேனே, பிழைச்சேனே! ஆமாம், நீங்கள் அந்த வண்டியில் போகவில்லையா?" என்ருள் அந்தப் பெண்.

"இல்லே. நான் வழியனுப்ப வந்தேன்............" என்று இழுத்தாள் செல்லம்.

"உங்களே எங்கேயோ பார்த்தது மாதிரி யிருக்கிறதே! ஆமாமாம். ஞாபகம் வருகிறது! நீங்கள் ஸ்ரீமதி செல்லம் இல்லேயா? பிரசித்திபெற்ற மாணவ எழுத்தாளர்தானே தாங்கள்? உங்களுடைய புகைப் படத்தை அநேக பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன்........."

"தாங்கள் யார்?"

"என் பெயர் முத்தம்மாள். தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே........" என்று கூறிக்கொண்டே விஷமப் புன்னகை செய்தாள் அந்தப் பெண்.

செல்லத்திற்கு அவள் பெயரைக் கேட்டதும், 'சுரீரெ'ன்றது. ஆமாம், அந்த முத்தம்மாளும் ஒரு எழுத்தாளர்தான். இவ்வளவு சாதுவாக வேஷம் தரித்திருக்கும் எழுத்தாளராகிய முத்தம்மாளா இப்படி நாடகம் நடுப் பிளாட்பாரத்தில் நடத்துகிறாள்? செல்லத்தால் நம்ப முடியவில்லை. ஆனால் அந்தப் பெண் செல்லத்தைப் பேச விட்டால்தானே?

"செல்லம்! இந்தப் புருஷர்களுக்கே மூளை மிகவும் கொஞ்சமாயிருக்கிறது. களைத்து வந்த எனக்கு அவன் காபியை வாங்கிக்கொடுத்தது என்னமோ ரொம்பப் பரோபகாரமான செயல்தான். ஆனால் அவன் உள்ளத்தில் உள்ள களங்கத்தை நான் உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டுமா? அதே வாலிபன் நேற்று என்னைப் பார்த்துக் கொண்டே தன்னுடைய வேலைக்காரனிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினான். நேற்றைய முந்தின நாள் என்னைக் கண்டதும் அதே வேலைக்காரனிடம் ஒரு ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினான். காரணம் என்னவாயிருக்க முடியும் ஸ்ரீமதி செல்லம்? நான் இப்படி எளிய உடை பூண்டிருக்கிறேனே, என்னைக் கரையேற்றி விட ஒரு சைகையாகவா வேலைக்காரனிடம் அவன் பணம் நீட்டுகிறான்? உண்மையில் அந்தப் பணம் வேலைக்காரனிடம் போய்ச் சேராது; என்னிடம் சேர நான் அனுமதித்து விடுவேனா? அவனுக்கு அறிவு கிடையாது. எனக்கு அறிவு உண்டு........"

"ஸ்ரீமதி முத்தம்மா! நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்?"

"அதிருக்கட்டும், செல்லம்! இந்தப் புருஷர்களே விவஸ்தை கெட்டவர்கள். 'பெண்ணென்றால் பேயும்

இரங்கும்' என்று சொல்கிறார்கள். அந்தப் பேய்கள், பாவம் பேய்களே அல்ல! எனக்கு இரக்கம் காட்டி காப்பி வாங்கிக் கொடுத்தானே, இவன்தான் பேயிலும் பெரிய மகாப் பேய்!"

"முத்தம்மா! முத்தம்மா! அப்படிச் சொல்லலாமா?"

"ஏன் சொல்லக் கூடாது ஸ்ரீமதி செல்லம்? இந்த அறுபது ரூபாய் உத்தியோகத்துக்காகத் தாம்பரத்திலிருந்து வந்து உழைத்து ஓடாகப்போகிறேன்; போதாக் குறைக்கு எழுத்தாளத்துவ ஆசை பிடித்து ராத்திரி பதினோறு மணிவரைக்கும் எழுதுகிறேன்- என் பாட்டுக்குப் போகும் என்னை இவன் ஏன் ஒரு மாசமாக வளைக்கிறான்? போனால் போகிறது! எழுத விஷயமாவது தேடிக்கொடுக்கிறான்! பாவம்! இப்போது காப்பி வாங்கித் தந்தான்! நான் என்ன, காலேஜ் மாணவியா; காப்பிக்குக் காதல் கொள்ள?"

முத்தம்மா முடிக்க வில்லை, செல்லம் அவள் கடைசியாகச் சொன்னதைக் கேட்டு விட்டு வெலவெலத்து விட்டாள். அதற்கு மேலும் முத்தம்மாளுடன் பேச அவளுக்குப் பிடிக்க வில்லை. நல்ல வேளையாக முத்தம்மாள் வண்டியும் வந்து சேர்ந்தது.

"நான் வரட்டுமா?" என்றாள் செல்லம்.

"ஓஹோ ஹோ! என்னையறியாமல் உளறி விட்டேன். பொதுப்படையாகச் சொன்னேன். வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதீர்கள், ஸ்ரீமதி செல்லம்!" என்று முத்தம்மாள் கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டாள்.

ஹாஸ்டலை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போது செல்லத்தின் வாய், "அவள் சொல்லுவதில் ரொம்ப உண்மை இருக்கிறது! அந்தத் தடிப் பயல் ஏன் பணத்தை நீட்டுகிறான்?......ஆனால் காலேஜ் மாணவிகளிடம் முத்தம்மாளுக்கு அத்தனைக் கோபம் வந்திருக்க வேண்டாம்......," என்று முணுமுணுத்தது.

5

கதையைச் சொல்லி விட்டுப் பெரு மூச்செறிந்தாள் செல்வம்.

"ஆமாண்டீ யம்மா, ஆமாம்! காலேஜ் மாணவி களாகிய நம்மை கண்டால் எல்லோருக்கும் இளக்கார மாகத் தான் இருக்கும்......" என்றுகூடப் பெருமூச் செறிந்தாள் லக்ஷ்மி.

ஆனல் நீலாவுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. "போங்கடீ! அவன் ரூபாய் நீட்டியதை—அந்தத் திமிரை — எல்லோரும் மறந்து பேசறேளே!" என்ருள் அவள்.

"நானும் தான் கேட்கிறேன், அவனுடைய வேலைக் காரனிடம் ரூபாய் நோட்டை நீட்டினல் இந்த முத்தம் மாளுக்கு என்ன வந்தது? இவள் என்ன, தெருவில் போகிற வம்பை விலை கொடுத்து வாங்க ஆசைப் படருளா?" என்ருள் இது வரை சும்மா யிருந்த ஜயலக்ஷ்மி.

மற்ற மூன்று பேரும் ஜயாவை கோபத்தால் சுட்டு எரித்து விடுபவர்கள் போலப் பார்த்தார்கள். அதற்குள் 'சோற்று மணி' அவர்கள் காதுகளில் விழுந்ததால் சாப்பிடப் போனர்கள்.

சாப்பிட்டு விட்டுத் திரும்பி செல்லம் மேஜை எதிரே உட்கார்ந்து கொண்டாள். முடிக்கப் பெருத கதையின் பிரதியை எடுத்தாள். ஒரு தரம் நீள வாசித்தாள். ஒரு புருஷத்தியாகி யுடைய வீரத்தை விளாச ஆரம்பித்திருந் தாள் அந்தக் கதையில்.

செல்லம் அதை என்ன செய்தாள் தெரியுமா? சுக்கு நூருகக் கிழித் தெறிந்தாள். 'புருஷர்களுடைய விவஸ்தை கெட்ட குணத்தைப்பற்றி' என்று அன்று இரவே ஒரு கதை எழுதி முடித்தாள்!

பிறகு தான் அவளால் நிம்மதியாகத் தூங்க முடிந்தது!

கனவுப்பாலம்

"சுகி"

" சுகி "

எத்தனையோ பேர் அவளை மணக்க முன் வந்தும் உண்மையான 'அவளை'க் காணமல்; போய் விட்டனர். 'அவன்' வந்தவன் கண்டான்; காதல் கொண்டான்.

நில வெறிக்கும் காட்டில்
  நிமிர்கின்ற மலரோ?
கல கலெனப் பொழியும்
  கட்டாற்று நீரோ?
மலர் சிந்தும் மதுவோ?
  மனங் குளிரும் சுனையோ?
பலர் பார்த்தும் பிடியா
  பஞ்சவர்ணக் கிளியோ?

அவன் உள்ளத்தில் உருவங்கள் பதிகின்றன. சௌந்தர்யத்தில் திளைக்கிறன்.

அழகன் தரும் முத்தம் வேண்டி
  அலர்ந் திருக்கும் பவள இதழ்
குழந்தையின் குமிழ் வாய்க்குக்
  குவிந்திருக்கும் கொங்கை மார்பு
பழமொடு பாலுங் கொண்ட
  பைங்கிளி மழலைச் சொற்கள்
கழங் கென ஆடி நிற்கும்
  கருமணிக் கண்கள் ஐய!
விண்ணின் வாழ் வில் வர்ணம்
  வியன் வர்ணப் புடவை கட்டி
கண்ணுக்கு மை யெழுத
  கயல் கலங்கித் தான் புரள

மண்ணில் வளர்ந்து விட்ட
    மாங்கன்றுத் தளிர் போல
பெண்ணவள் பிறை நுதலாள்
    பேதமை உருவங் கொண்டாள்

[அப் பேதைக்கும் இந்த ரஸிகனுக்கும் மண விழா நடை பெறுகிறது. மணப் பந்தலில்ப் பார்க்கிறான்.]

மணப்பெண் என்று விட்டால்
    மரியாதை வந்தி டுமோ?
கண்களிலே நாணப் போர்வை
    கழுந்தினிபோல என்ன கொள்ளை?
பிணம் போல இருக்கு மிவள்
    பெண்ணு? அன்றிப் பித்தா?
கணமும் துடிக்குதே கலக விழி
    கலவிக்கே கண் கொடாளோ?

(அவள் இருந்த நிலை)

குனிந்த தலை நிமிர்ந்தவள்
    குபுக் கென சிந்துபு
குமிண் சிரிப்பினள்; ஆங்கு
    கொடி யெனக் கொலுவிருக்கக்
கனிந்த மனத்தானைக் கண் கொண்டு
    களி யாமல் கற்பாவை
குனிந்த தலை நிமிராமல்
    குத்து விளக்கென இருந்தாள்.
மங்கல நாணெடுத்து மஞ்சள்
    கயிற்றினில் பொறுத் தியவன்
திங்களை வழிபட்டுத் திகட்டாத
    தேங்கனி திருக் கழுத்தில்
ஆங்கவன் முடிய முழங்கிற்று
    மங்கல வாத்யம் முழங்கிற்று
தாங் கொணு சிரிப்புத் தாவிற்று
    தகர்ந்த தவன் மேனியெலாம்.
"நாண மெங்கே சென்றது?
    நவி" லெனக் கேட்டதும்

"ஆணவத் துள் அடைக் கலம்
அடைந்தது ஐயா அறிவீர்;
காணப் பிரிய மெனில்
கண்ணில் காணீ ரோ ?"
காணு இடத்தி லெல்லாம்
கருத்துப் புதையல் கண்டான்.

[அன்றிரவு சோலையிலே புல்த் தரையாகிய மெத்தையில் மேலே நிலவொளி வீச அமர்கின்றார்கள். அவன் சொன்னான்.]

"பத்தும் பவிஷும் பதினெட்டும்
பற்பல வர்ணப் புடவைகளும்
சொத்தும் சுகமும் சுளை சுளையாய்
சோப்பும் சீப்பும் வேண்டாமே!
சித்தம் கலங்கா நெற்றியிலே
சிவந்த திலகம் தானிட்டு
புத்தம் புதிய புன்னகைகள்
புதிது புதிதாய்ப் பூக்கட்டும்.
அடுப்பை ஊதும் அழகிதழ்கள்
அன்புக் கனலை ஊதட்டும்
நெருப்பைத் தள்ளும் நெளி விரல்கள்
நேர்மை விறகைத் தள்ளட்டும்
பருக்கை படைக்கும் தளிர்க்கரங்கள்
பண்ணோடு இசையை மீட்டட்டும்
விருப்பைக் கொதிக்க விட்டிட்டால்
வெறுப்பே அங்கு வீழ்ந்து விடும்."

[அவள் இவ்வளவையும் கேட்டு வந்தாள். நிலாவும் பகட்டாக் காய்ந்து, காற்றும் ஊர்ந்தது.]

வேறு:

1. அவன் : கட்டிலும் மெத்தையும்
கனத்த திண்டுகளும்
கலவிக்கு வேண்டுமோ?

அவள் : விட்ட மிலா வீட்டில்
வெகு வாகப் பாயும்
துட்ட நிலாப் போதாதோ !

2. அவன் : கற்கண்டு சீனியொடு
காய்ச்சிய பால்தான்
காதலர்க்கு வேண்டுமோ ?

அவள் : பவள இதழ் பரந்த மார்பு
பண்சுவை வாய்தான்
பாவிகட்குப் போதாதோ !

3. அவன் : சந்தனமும் மென் மணமும்
சம்பாவனைப் பணமும்
சாந்திக்கு வேண்டுமோ ?
வெந்தனமும் வேல் விழியும்
வேகுகி ன்ற மனமும்
விளையாடப் போதாதோ !

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

டாரீ கேசத்தின் ஆரோக்கியத்திற்கான ஒரு புது வழி. கேசத்திற்கு இயற்கையான சத்துவத்தை மயிர்க்கால் வழியாக அளிக்கிறது. பொடுக்கைப் போக்கி வழுக்கையைத் தடுத்து அழகு வாய்ந்து நீண்டு பட்டைப்போல் பளபளப்புள்ள கேசத்தை வளர்க்கிறது. அந்தமில்லாத சிகைக்கு மேனி கொடுத்து அலை அலையாக மயிர் உண்டாக்கும்.

ஒரு புட்டி ரீடா வாங்கி சேகத்திற்கு புது உயிரளித்து புது மேனியை உண்டாக்குங்கள். ரீடா எங்கும் கிடைக்கும். ஒரு புட்டியின் விலை 15 அணா

RITA
HAIR TONIC

தங்க ஒட்டியாணம்

ஆர். கே. பார்த்தஸாரதி, எம். ஏ., எல். டி.

"மாமா! நமஸ்காரம் பண்றேன்" என்று ஓர் இனிமையான நாணம் நிறைந்த குரல் சுந்தரமையரை நிகழ் காலத்திற்குப் பலவந்தமாக இழுத்தது. தமது வாசற் பக்கத்தறையில் வெளியே பார்த்தவாறு உட்கார்ந்திருந் தார் அவர். அப்போது அவர் மனம் ஏதோ பழைய சம்ப வங்களின் நினைப்பில் சிக்கிக்கொண்டிருந்தது.

அடுத்த வீட்டுப் பங்கஜம்—போன வருடம் கலியாண மான யுவதி—"மாமா! நமஸ்காரம் பண்றேன்" என்று கூறியவுடன் அவர் அவள் பக்கம் திரும்பினர். "என் னம்மா விசேஷம்?" என்று அன்பு கனிந்த குரலில் அவ ளைக் கேட்டார். பங்கஜம் பதில் ஒன்றும் கூறவில்லை; ஆனால் அவள் கன்னங்களில் "குபீர்" என்று பாய்ந்த செம்மை பதில் கூறிவிட்டது. அத்துடன் அப்போது அவர் அறைக்குள் வந்த அவருடைய மனைவி தர்மாம்பாள் "கொழந்தை நாளைக்கி புக்காம் போறு; அதான் ஒங்க கிட்ட சொல்லிட்டு நமஸ்காரம் பண்ண வந்திருக்கா" என்று விஷயத்தை விளக்கினள். தர்மாம்பாளின் வார்த் தைகள் அவருடைய பழைய சிந்தனைத் தந்திகளை அஜாக்கி ரதையாக இடறிவிட்டன. பங்கஜம் மாமாவையும் மாமி யையும் நமஸ்கரித்துவிட்டு "போய்விட்டு வரட்டுமா?" என்றுள். "என்ன பங்கஜம்! இந்த தீபாவளி ஆமண்டை யாளுடையா?" என்று சுந்தரமையர் கேலி செய்து முடிப் பதற்குள் பங்கஜம் சிட்டாகப் பறந்து வெளியே சென்று விட்டாள். அந்த ஓட்டத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி! பங்கஜம் போனவுடன் "எனக்குக்கூட தோணறது அந்த தடியன் இந்த வருஷமானும் தீபாவளிக்கு இங்கே வரு வான்னு" என்ற சுந்தரமையரின் துக்கம் கலந்த, ஆறுத லளிக்கும், வார்த்தைகள் மறைவில் அவர் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அவர் பெண் ராஜத்தின் இதயத் தைத் துளிர்க்கச் செய்தன.

அப்போது அவருடைய மனப்பரப்பில் தம் பெண் ராஜத்தின் விவாகமும் அதற்குப் பின் நடந்த துயரச் சம்பவங்களும் சோகச் சுருளை விரித்தன. பழைய நினைவுகளை பலாத்காரமாக அடக்குவதில் அடக்க முடியாத வேதனை யுண்டாவதை அனுபவித்து அறிந்த சுந்தரமையர் கடிவாளத்தைத் தளர்த்தி எண்ணக் குதிரைகளைச் சொடுக்கி ஓட வைத்தார்.

* * *

நேர்மையான சிந்தையும், சிந்தையைப் பொய்க்காத நடத்தையும் சுந்தரமையரின் உபாத்தியாய வாழ்க்கையைத் துலங்கச் செய்தன. மனைவி தர்மாம்பாளும் ஒரே பெண் ராஜமும் சொந்தப் பள்ளிக்கூடமும் அவருடைய வாழ்க்கையின் அழகிய அருமையான சின்னங்கள். கபடற்ற கிராம வாழ்க்கை சுந்தரமையரைச் சந்தோஷ சாகரத்தில் ஆழ்த்தியது. அவருடைய அருமைப் பெண்ணின் கலியாணம் எதிர்பாராத விதத்தில் நடந்தது. வடக்கே ஓர் கல்லூரியில் வேதாந்த ஆசிரியராகவிருந்த ஆத்மராமையர் தம் மனைவி கமலம் ஒரே பிள்ளை ராமஸ்வாமி இவர்களுடன் சுந்தரமையரின் கிராமத்திற்கு ஆறு மாத ஓய்வில் வந்து சேர்ந்தார். சுந்தரமையர் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்துவதற்கு முன்னரே ஆத்மராமையர் அந்தக் கிராமத்தைவிட்டுப் பம்பாய்க்குச் சென்றுவிட்டார். அவருடைய பூர்வீகக் கிராமம் அது. இப்பொழுது, அவர் ஒரு சமயம் இங்கே வாழ்ந்ததன் ஞாபகச் சின்னங்களாக ஓர் வீடும் சிறிது நிலமும் தானிருந்தன.

வந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் சுந்தரமையரும் ஆத்மராமையரும் ஆப்த நண்பர்களாகிவிட்டனர். ஆத்மராமையரின் குடும்ப விஷயங்கள் யாவும் சுந்தரமையருக்குத் தெரிந்துவிட்டன. அவருடைய ஒரே பிள்ளை ராமஸ்வாமி பி. ஏ. பாஸ் செய்துவிட்டுச் சரியான வேலைக்காகக் காத்திருந்தான். அவருடைய ஒரே பெண் விசாலம் கலியாணமாகிப் புக்ககத்திற்குச் சென்றுவிட்டாள்.

கமலமும் தர்மாம்பாளும் நெருங்கிப் பழக ஆரம்பித்தனர். பெண்கள் பழகும் விதமே தனி. வெகு சூசனை

யாக அவரவர் குற்றங்களை யறிந்துவிடும் சாமர்த்தியம் அவர்களுக்கு இயற்கையாக உண்டு. கமலம் சிறிது "ராங்கிக்காரி" என்று தர்மாம்பாளின் மனத்தில் ஓர் அபிப்பிராயம் விழுந்தது. ஆனாலும் தென்னிந்திய வாடையே யில்லாமல், சொந்த ஜனங்களுடனும் தன்னைப் போன்ற ஸ்திரீகளுடனும் பழகும் சந்தர்ப்பமே இல்லாமல் இத்தனை நாட்களும் வடக்கேயே வசித்து வந்த ஒருத்திக்கு இக்குறை இருப்பது சகஜம்தான் என்று தர்மாம்பாள் நினைத்ததால் அவர்களுடைய நட்பில் பொறிசல் ஒன்றும் ஏற்படவில்லை. சில நாட்கள் கழித்து 'கமலத்திற்குப் பணத்தில் கொஞ்சம் குறியோ!' என்ற சந்தேகம் தர்மாம்பாளின் மனத்தில் தட்டியது. பின்னர் "யாருக்குத் தான் குறியில்லை?" என்று தன்னுடைய கேள்விக்குத் தானே பதில் சொல்லிக்கொண்டாள்.

அன்றொரு நாள் வேடிக்கையாகச் சுந்தரமையரின் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட வந்த ராமஸ்வாமி அவருடைய பெண் ராஜத்தையும் பார்வையிட்டான். அப்போது ஏற்பட்ட ஓர் உறவை, அவர்களிருவருடைய யௌவனமும் காதலாக மாற்றிக்கொண்டிருந்தது ஓர் ரசவாதியைப் போல்.

ஐந்து மாதங்கள் போனவகையே தெரியாமல் பறந்து சென்றன. ஆறுவது மாதம் அவர்களுடைய விவாகத்தை முடித்துத் தன்னை ஸபலமாகச் செய்துகொண்டது. விவாகத்தின் சிறப்பை சம்பந்திகளின் சேர்க்கையை, வதூவரர்களின் பொருத்தத்தை அந்தக் கிராமத்தினர் எல்லோரும் பல நாட்கள் வரை பேசிப் புகழ்ந்து கொண்டிருந்தனர். ஆத்மராமையர் ஓய்வு நாட்கள் முடிந்தவுடன் நாட்டுப் பெண்ணையும் தம்முடன் அழைத்துச் சென்றார். முதன் முதலாகத் தம் பெண்ணை விட்டுப் பிரிந்த பெற்றோர் தவித்த தவிப்பு கல்லையும் உருக்கும்படியாகவிருந்தது.

* * *

ராஜம் பம்பாய்க்குச் சென்ற இரண்டு மாதங்களுக்குள் சுந்தரமையரின் காதில் அநேக விஷயங்கள் விழலாயின—தந்தியில்லா வாய்க் கம்பிகள் மூலம். பிள்ளை,

தாயாரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு ராஜத்தினிடம் அலட்சியமாக இருப்பதாகவும், மாமியார் அவளைக் கொஞ்சம் படுத்துவதாகவும் ஆத்மராமையர் பெயருக் கேற்றபடி ஆத்மானந்தத்தில்—வேதாந்தத்தில் ஊறி, குடும்ப வியவகாரங்களையே கவனிப்பதில்லை யென்றும் ஊர்வாய் தாறுமாருகப் பேசிக்கொண்டிருந்தது. அயல் வாழப் பொறுக்காத அசூயைப் பிண்டங்களின் அபத்தப் பேச்சு அது என்று சுந்தரமையர் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்த தர்மாம்பாளை அடக்கிவிட்டார். சம்பந்தி களின் நன்னடத்தையில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை. தாயின் உள்ளம் மட்டும் மௌனமாக ஏங்கியது.

வதந்திகள் பலக்கவே சுந்தரமையருக்கே சிறிது சந்தேகம் ஏற்பட்டது. கடைசியில் அவர் பம்பாய்க்குச் சென்று சாந்தி முகூர்த்தத்தை அந்த மாதத்து முடிவில், கிராமத்தில் வைத்துக்கொள்ளலாமென்று சம்பந்திகளிடம் சொல்லிவிட்டுப் பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து விட்டார். தர்மாம்பாள் பெருமூச்சு விட்டாள். பெண்ணை எவ்வளவோ குடைந்து கேட்டும் அவள் அந்த வீட்டு விஷயத்தைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை.

சுந்தரமையரின் திட்டப்படியே முஹூர்த்தம் நடந்து விட்டது. சம்பந்திகள் லோக ரஞ்ஜகமாகப் பழகவே அவருடைய சந்தேகம் தீர்ந்துவிட்டது. தர்மாம்பாளை மட்டும் விவரிக்க முடியாத ஓர் திகைப்பு அலைத்துக்கொண் டிருந்தது.

மீண்டும் ராஜம் பம்பாய்க்குச் சென்றபொழுது தர்மாம்பாளைப் போல, சுந்தரமையரும் விசும்பி விசும்பி அழுதுவிட்டார். பின்னல் ஏற்படவிருக்கும் கஷ்டங்களை அவர் உள்ளம் அறிந்துவிட்டதோ என்னவோ!

* * *

ஐந்தாறு மாதங்களுக்குள் மீண்டும் வதந்திகளுக்கு இறக்கை முளைத்தன. ராஜம் ஸ்நாநம் செய்யவில்லை என்ற செய்தி தர்மாம்பாளின் காதில் விழவே, பெண்ணை அழைத் துக்கொண்டு வந்துவிட வேண்டுமென்ற கவலை அவளை அரித்தது. அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அவள் கணவனிடம் பெண்ணை அழைத்துக்கொண்டு வரவேண்டு

மென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். இத்தடவை பம்பாய்க் குடித்தனத்தைப்பற்றிய உண்மையை நன்கு அறிந்துவிட வேண்டுமென்று சுந்தரமையருக்கும் துடிப்பு ஏற்பட்டது. எனவே பம்பாய்க்குக் கிளம்பிவிட்டார். அப்பா! பாசத்திற்குத்தான் என்ன சக்தி!

பம்பாய் போய்ச் சேர்ந்தவுடன் முதற் காரியமாகப் பெண்ணை அழைத்துப் போக வேண்டுமென்று கண்டிப்பான குரலில் சம்பந்திகளிடம் கூறினர். அதை யாரும் ஆட்சேபிக்காததே அவரைத் தூக்கி வாரிப் போட்டது. ராஜம் எல்லோரையும் நமஸ்கரித்துவிட்டு வண்டியில் ஏறி உட்காரப் போகும் சமயத்தில், "ராஜம்! நான்சொன்னது ஞாபகமிருக்கட்டும்," என்று அவள் மாமியார் சூத்திர நடையில் உறுதியாகக் கூறியது சுந்தரமையருக்குப் புதிராகவிருந்தது. "சரி அம்மா!" என்று ராஜம் வணக்கமாகப் பதில் கூறியது சுந்தரமையரின் திகைப்பை மேலும் அதிகரிக்கச் செய்தது.

* * *

கடைசியில் வெகுவாக நிர்ப்பந்திக்கப்படவே ராஜம் அதுவரையில் மனப் பெட்டியில் வைத்து மூடியிருந்த ரகசியத்தை வெளியிட்டாள்,

"அவள் மாமியார் நல்லவள்தான்; ஆனல் சந்தர்ப்பங்கள் அவளைச் சிடுமூஞ்சியாகவும் பொல்லாதவளாகவும் மாற்றிவிட்டன. அவளுடைய பெண் விசாலத்தால் அவளுக்கு மிகுந்த மனக்கவலையும் உபத்திரவமும் ஏற்பட்டன. அவள் புக்ககம் போனது முதற்கொண்டு கண் கலங்காத நாளே கிடையாது. அவ்வப்போது ஏதேனும் ஒரு சாமான் பிறந்தகத்திலிருந்து கொண்டுவர வேண்டுமென்று அவள் கணவன் அவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பிவிடுவது வழக்கம். மீண்டும் அந்தச் சாமானுடன்தான் அவள் கணவன் வீட்டிற்குச் செல்ல முடியும். இந்த வயிற்றெரிச்சலில் கமலம் ராஜத்தைப் படுத்த ஆரம்பித்தாள். மாமனர் வாய் திறப்பதே கிடையாது. பிள்ளை தாயார் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான்.

"ஒரு சமயம் தங்க ஒட்டியாணம் ஒன்று செய்து போட்டுக் கொண்டுதான் உள்ளே வரவேண்டுமென்று

கூறி விசாலத்தின் கணவன் பிறந்த வீட்டிற்கு அவளை அனுப்பிவிட்டான். அச்சமயத்தில், சாந்தி முஹூர்த்தம் ஆனவுடன், ராஜத்திற்கு ஓர் தங்க ஒட்டியாணம் வாங்கிப் போடும்படி மனைவியிடம் ஆத்மராமையர் ஐநூறு ரூபாய் கொடுத்திருந்தார். பிறகு அதைப்பற்றி அந்த வேதாந்தி ஒன்றும் விசாரிக்கவே யில்லை. இப்பொழுது பெண் வீட்டிற்கு வந்தவுடன் தர்மாம்பாள் அந்தப் பணத்தில் விசாலத்திற்குத் தங்க ஒட்டியாணம் செய்துவிட்டாள். இதுவும் அந்த வேதாந்திக்குத் தெரியாது. விசாலம் ஒட்டியாணத்துடன் குதூஹலமாகக் கணவன் வீட்டிற்குச் சென்று விட்டாள்.

இவையெல்லாம் நடந்த பல நாட்களுக்குப் பிறகு வேதாந்தி வாய்திறந்து தங்க ஒட்டியாணத்தைப் பற்றி விசாரித்தார். பதில் கூற வகையறியாத கமலம், கலியாண சமயத்திலேயே ராஜத்தின் தகப்பனார் அவளுக்கு ஓர் தங்க ஒட்டியாணம் செய்து போடுவதாக வாக்களித்திருக்கிறார் என்று ஓர் அபாண்டமான பொய்யைப் போட்டுடைத்தாள். வேதாந்தி மீண்டும் வாயை மூடிக்கொண்டு விட்டார். ராஜத்தின் மனம் துணுக்குற்றது. பிறகு தான் கூறிய பொய்யை மெய்யாக்கக் கமலம் தங்க ஒட்டியாணம் எங்கே யென்று ராஜத்தை வெகுவாக எச்சரிக்க ஆரம்பித்தாள். அதிலிருந்து கிளம்பிய சண்டை சச்சரவுகளில் ராஜத்தின் மண்டை உருண்டது. அன்று அவள் வண்டியேறிய போது கமலம் குறிப்பிட்டது அந்தத் தங்க ஒட்டியாணத்தைத்தான்.

இவ்வளவும் கூறிவிட்டு ராஜம் "ஓ" வென்று அழுத போது சுந்தரமையரின் இதயம் கோபத்தாலும் வருத்தத்தாலும் பொருமியது.

அன்று, மறுபடியும் ராஜத்தைச் சதிகாரர்களின் வீட்டிற்கு அனுப்புவதில்லை யென்று சுந்தரமையர் சங்கற்பம் செய்து கொண்டது கொண்டதுதான். பின்னர் எவ்வளவோ பேர் - தர்மாம்பாள் உட்பட - தலை கீழாக நின்றும் தம் அபிப்பிராயத்தை அவர் மாற்றவேயில்லை. சுந்தரமையரின் நியாயமான கோபம் வெறியாக மாறவே, பெண்ணின் குடும்ப வாழ்க்கையின் சௌக்கியத்தைக் கூட அவர் மறந்து விட்டார். "ஏனடா ரகசியத்தை வெளியிட்

டோம்?" என்று ராஜம் அங்கலாய்த்தாள். பெண்ணிதயத்தின் மென்மையை புருஷன் எங்கே அறியப் போகிறுன்?

அடுத்த வீட்டுப் பங்கஜம் அவரை நமஸ்கரிக்க வந்த போது சுந்தரமையர் மேற்கூறிய சம்பவங்களின் சுழல்களில்தான் அகப்பட்டுக் கொண்டிருந்தார். பங்கஜம் சென்ற பிறகும் "அந்தத் தடிப்பயல் தானுக இங்கு வர வேண்டும்" என்றுதான் அவர் ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தார்.

* * *

கிராமத்தில், சுந்தரமையரின் முறுக்கு ஏறிக்கொண்டிருந்த அதே சமயத்தில் பம்பாயில் கமலத்தின் முறுக்குத் திடீரெனத் தளர்ந்து விடும்படி ஓர் எதிர்பாராத சம்பவம் நடந்தது.

தீபாவளிக்கு இன்னும் பத்தே நாட்கள்தானிருந்தன. தீபாவளிக்குத் தங்க ஒட்டியாணத்துடன் ராஜம் வருவாளென்றும் அப்போது தன்னுடைய தவறு சரியாகி விடுமென்றும் கனவுகண்டு கொண்டிருந்தாள் கமலம். அன்று கமலம் தன்னுடைய பெண் குடும்ப வாழ்க்கையில் தங்க ஒட்டியாணத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் காட்சியை மனக் கண்ணுல் கண்டு களித்துக் கொண்டிருக்கும் பொழுது வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது. ராஜம் தான் வந்து விட்டாள் என்று குதூஹலமாக வாசலுக்குக் குதித்தோடிச் சென்ற கமலம் அப்படியே திகைத்து நின்று விட்டாள். வாடிய முகத்துடன் வண்டியினின்றும் அவள் பெண் விசாலம் இறங்கினுள். பேசாமல் பெண்ணும் தாயாரும் வாசலைத் தாண்டி உள்ளே சென்ற போது வாசற் பக்கத்து அறையில் உட்கார்ந்திருந்த ஆத்மராமையரின் வாயினின்றும் "ஹூம்! தன்வினை தன்னைச் சுடும்" என்ற வேதாந்த வார்த்தைகள் வெளிப் போந்தன. பெண் பிறந்தகத்திற்கு வந்ததன் காரணத்தை ஊகித்து விட்டார்.

பெண்ணை விசாரித்ததில் மறுபடியும் அவளை கணவன் வைர மூக்குத்திப் போட்டுக் கொண்டுதான் உள்ளே காலடி எடுத்து வைக்க வேண்டுமென்று துரத்தி விட்டான் என்பதை அறிந்தாள். கமலம் முதன்முதலாக ஆத்ம சோதனையில் இறங்கினுள். மனச் சாட்சியை அமுத்தித் தான் ராஜத்திற்கு செய்த அநீதி சரிதான் என்று சாதிக்க

எவ்வளவோ முயன்ருள்; முடியவில்லை அந்தராத்மா "துரோஹத்தின் பலன் இதுதான்" என்று விடாமல் குத்திக்காண்பித்துக்கொண்டிருந்தது. அத்துடன் கணவனின் வார்த்தைகள் வேறு அவன் இதயத்தின் மின்னலைத் திறந்தது — உள்ளே குடியிருந்த இருள் வெளியேற.

கமலம் பித்து பிடித்தவள் போல் மாடிக்கு ஓடினள். அங்கு உட்கார்ந்திருந்த பையனிடம், "ராமு! ராஜத்தை உடனே அழைச்சுண்டு வா. தீபாவளிவேறே வரது. தங்க ஒட்டியாணமும் வாண்டாம், மண்ணுங்கட்டியும் வாண்டாம். போறும் போறும் நான் விசாலத்திற்கு ஒட்டியாணம் போட்டு அனுப்பிச்ச வயத்தெரிச்சல்" என்று திணறத் திணறக் கத்தினள். பையன் அதற்குச் சம்மதித்த பிறகுதான் கீழே இறங்கினள்.

அவள் கீழே இறங்கிய உடனே ராமுவிற்கு இரண்டு கடிதங்கள் வந்தன. இரண்டு வருடங்களாக அடக்கிவைத்திருந்த உணர்ச்சிகளை யெல்லாம் வார்த்தைகளாகக் கொட்டியிருந்தாள் ராஜம் ஓர் கடிதத்தில். அவள் அவனை அன்புடன் தீபாவளிக்கு அழைத்திருந்ததும் அதற்குச் சற்று முன்னுல் தன் தாயார் அவ்வாறு பேசியதும் ராமுவைப் பிரமிக்க வைத்தன. பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்த ஆனந்தம் ஏற்பட்டது அவன் உள்ளத்தில். அவனுக்குத் தலைகால் புரியவில்லை.

இரண்டு கடிதங்களுக்கும் பதில் எழுதிவிட்டு, மேலே நடக்கவேண்டிய காரியங்களைக் கவனிக்க ராமஸ்வாமி அவசரமாகக் கீழே இறங்கினன்.

* * * * * * * * *

அடுத்த நாள் தீபாவளி பண்டிகை: ஆண் பெண் சிறியவர் பெரியவர் எல்லோரும் கட்டுக்கடங்காமல் களிப்படையும் நாள். ஆனல் தீபாவளியை 'வா' வென்றழைக்கும் ஏற்பாட்டையே சுந்தரமையரின் வீட்டில் காணவில்லை. மரணகாலத்து நிசப்தம் வீட்டிலுள்ளவர்களின் உற்சாகமின்மைக்கு வியாக்கியானம் எழுதிக் கொண்டிருந்தது.

உள்ளே ராஜம் மௌனமாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். தர்மாம்பாள் ஒன்றும் புரியாமல்

கையைப் பிசைந்து கொண்டிருந்தாள். அப்போதுதான் "அயோக்கியப் பயல். அதுக்குத்தான் அப்பவே கடிதாசி போட வேண்டாம்னு சொன்னேன். பதிலைப் பாரு பதிலை. கழுதை தானு வரட்டும்னு கேட்டகளா?" என்று சுந்தரமையர் யாரையோ திட்டிவிட்டு ஓய்ந்திருந்தார்.

அப்பொழுது வாசலில் ஓர் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மாப்பிள்ளை ராமஸ்வாமி வெளியே குதித்த போது வீட்டிலுள்ள எல்லோருடைய உள்ளமும் ஒரே சமயத்தில் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. அளவற்ற ஆனந்தம் அவர்களை ஓர் இன்ப மயமான பிரபஞ்சத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டது. "சத்தம் கொடுங்க சாமி" என்று வண்டிக்காரன் சப்தம் போட்ட பிறகுதான் எல்லோருக்கும் சுய உணர்வு திரும்பியது. எல்லோரும் உள்ளே சென்றனர், ராஜம் கதவிடுக்கிலேயே மெய் மறந்து நின்றுகொண்டிருந்தாள்.

ஒரு கணத்தில் அடுத்த நாளைக்கான ஏற்பாடுகள் பம்பரம் போல் சுழல ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் சமையல் தயாராகிவிட்டது. ராமஸ்வாமி இலையில் உட்கார்ந்தான். ராஜம் அவளுடைய மலர்க் கரத்தால் அன்னம் பரிமாறிக் கொண்டிருந்தாள்—அத்துடன் வெகு நாட்களாக பறிமாறப்படாமலிருந்த அன்பையும் சேர்த்து.

அதே சமயத்தில் வாசலில் ஓர் இளைஞன் "ஸார்! சுந்தரமையர் வீடு இதுவா?" என்று சுந்தரமையரைக் கேட்டான். அவர் "ஆமாம்" என்று சொல்லிவிட்டு வந்த காரியத்தைக் கேட்டார். "மாப்பிள்ளை ராமசாமியைப் பார்க்கணும்" என்றவுடன் அவனை மாப்பிள்ளையிடம் அழைத்துச் சென்றார். அவனைப் பார்த்தவுடன் ராமஸ்வாமி "அட பழி ராஜம்! இங்கே எங்கடா வந்து சேர்ந்தே!" என்று ஆச்சரியத்தில் கத்தினன்.

"அதெல்லாம் அப்புறம் சொல்லறேன்; முதல்லே சாதம் போடு; பசிக்கிறது" என்று கூறிவிட்டு ஸ்வாதீனமாக ஒரு இலையை இழுத்துப் போட்டுக்கொண்டான் நண்பன் ராஜம். சாப்பிட்டுக்கொண்டே கிண்டலை மீண்டும் ஆரம்பித்தான்.

"ஏண்டா ராமு! இத்தனை நாளா நான் உன்னை சிநேகிதன்னுதான் நெனச்சிண்டிருந்தேன். திடீர்னு

நான் எப்போ உன் மனைவியானேன்? ஏனப்பா! என்னை எப்போ கலியாணம் பண்ணிண்டே?"

"என்னடா பேத்தறே?" என்றான் ராமஸ்வாமி விஷயமொன்றுமே விளங்காமல். அதற்குள் ராஜம் ஓர் கடிதத்தை ராமுவிடம் நீட்டினான். அதை வாசித்தவுடன் அவன் முகத்தில் அசடு வழிந்தது. உடனே அன்று தனக்கு இரண்டு கடிதங்கள் வந்ததும், அவற்றுக்கு அவசரம் அவசரமாகப் பதில் போட்டுவிட்டு, ராஜத்தை அழைத்துவரும் ஏற்பாடுகளில் முனைந்ததும் ஞாபகத்திற்கு வந்தன. அவசரத்தில் மனைவிக்கு எழுதிய கடிதத்தை நண்பனுக்கு அனுப்பிவிட்டான். ராமஸ்வாமி இவற்றை யெல்லாம் நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது ராஜம் மீண்டும் பேசினான்.

"நல்ல வேலை செஞ்சே அப்பா! தீபாவளிக்குத் தமாஷா எங்க ஊருக்கு வான்னு எழுதின அதற்குள் என்னை இப்படியா அவமானப்படுத்தறது கண்ணே மூக்கேகாதலி யேன்று. வரலேன்னு வரலேன்னு எழுதறதுதானே!"

"போடா பழி! உனக்கு வரலேன்று எழுதின கடுதாசைத்தான் இங்கே போட்டிருக்கேன்" என்றான் ராமு மேலே மேலே போய்க்கொண்டிருந்த பரிகாசத்தைத் தடுக்க.

"ஹும்! தீபாவளிக்குப் போற ஜோர்லே தலைகால் புரியலே, சரி சரி! நான் இனிமே ஊருக்குப் போலா மோல்லியோ! பாவம் இங்கே எல்லாரும் தவிச்சுண்டிருக்கப் போறாளேன்றுதான் வந்தேன் 'வரலேன்று' எனக்கு எழுதின காயிதம் இங்கே வந்திருக்கும்னு தெரியும். அத்தோட தேவிக்கு எழுதின கடிதாசை நேரிலே உன் கிட்டயே கொடுத்துடலாம்னு வந்தேன்." என்றான் ராஜம்.

பிறகு "மாப்பிள்ளை சமர்த்தானடி" என்று பாடிக் கொண்டே நண்பன் ராஜம் கையலம்பினான். ராமஸ்வாமி யும் வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தான்.

சுந்தரமையரின் வாயெல்லாம் பல்லாகவிருந்தது.

தர்மாம்பாள் வாயைப்பொத்திக்கொண்டேசிரித்தாள்.

பெண் ராஜத்திற்கு வெட்கம் தாங்க முடியவில்லை. இவைகளை யெல்லாம் பார்த்துச் சிரிப்பது போல் ராஜத்தின் இடுப்பிலிருந்த தங்க ஒட்டியாணம் தகதகத்தது.

மனநூல்

ஆர். எஸ். ருக்மணி

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர் !"
—சுப்பிரமணிய பாரதியார்

'மக்கள் தாமே ஆறறி உயிரே' என்ருர் தொல்காப்பியர். ஐயறிவு உடையவை மாக்கள்; அதாவது விலங்குகள். ஐந்து அறிவுக்கு மேற்பட்ட உயர்ந்த அறிவு பகுத்தறிவு எனப்படும். அந்தப் பகுத்தறியும் திறன் இன்றி செயல் ஆற்றும் மனிதன், மனிதனைப் போலவே இருந்தாலும், மனிதன் அல்லன் என்ருர் திருவள்ளுவர்; 'மக்களே போல்வர் கயவர்' உருத்தோற்றத்தால். ஆனல் மன வேறுபாட்டாலும், குண வேறுபாட்டாலும் அவர்களை மக்கள இனத்தில் சேர்க்கக் கூடாது என்கிருர்.

குண வேறுபாடு மனத்தைப் பொருத்திருக்கிறது. பஞ்ச பூதச்சேர்க்கையால் ஆக்கப்பட்டவன்தான் மனிதனும் ஆனுலும் சிருஷ்டியில் அவன் உன்னதமான பதவியை அடைந்திருக்கிருன்; முக்குணச் சேர்க்கை வேறுபாடுகளால் ராக்ஷஸனுகவும், மானிடனுகவும், தேவனுகவும் ஆய்விடுகிருன். மனப் பண்பாட்டின் முதிர்ச்சியினுல் உயர்ந்த மனிசனுகவும், பண்பாடின்றி மனம் போன போக்கெல்லாம் போவதினுல் தாழ்ந்தவனுகவும் ஆகி விடுகிருன்.

நீரானது தான் சேர்ந்த நிலத்தின் தன்மையினுலே தன் இயல்பு மாறி, அந் நிலத்தின் தன்மையை அடைவதுபோல் மக்களின் அறிவு தன் இயற்கைத்தன்மை மாறி சேரும் கூட்டத்தாரின் தன்மையை அடையும். ஒருவனது அறிவு ஆற்றல்கள் பெரும்பாலும் பாரம்பரிய நியதியைப் பொருத்தே விகாஸம் அடைகின்றன. அப்படி இருப்பி

னும், சூழ்நிலை நியதிகள் பாரம்பரிய நியதிகளைப் பெரும் பாலும் பாதிக்கின்றன.

தினை விதையிலிருந்து தினைதானே முளைக்கும்? சுரை முளைக்காதே. அதுபோல நல்ல மதி நுட்பத்திற்குப் பேர் போன வம்ச பரம்பரையில் சிறந்த விஞ்ஞானிகள், அறிவாளிகள், மேதாவிகள் முதலியோர் தோன்றுகிறார்கள். சாதாரணமாக ஆன்ற குடிப்பிறந்தார் மாட்டு மனப் பண்புடைமை காணப்படுகிறது. கல்வி அறிவு பெருத குடும்பங்களில் மட்டமான அறிவுடைய மக்களே பிறக்கிறார்கள். குலத்தளவே ஆகும் மனமும் குணமும்.

இவ்விரு காரணங்களினால் நற்குடியிற் பிறத்தலும், நல்ல சூழ்நிலைகள் அமைதலும், நல்லார் இணக்கமும் அதிர்ஷ்ட வசம் என்பார்கள். சிறந்த பாரம்பரிய நியதியும், சூழ்நிலை நியதியும்தான் புத்தித்வம் அதிகரித்துக் காணப்படும் மக்களைச் சிருஷ்டிக்கின்றன. ஆனால் சில சிருஷ்டிகள் இந்த நியதிகளுக்கு மாறுபட்டுத் தோன்றுகின்றன. 'பண்டித புத்திரர்கள்' என்று ஏளனம் செய்யும்படியான மடசாம்பிராணிகள் மகா பண்டிதர்களுக்குப் பிறக்கிறார்கள். கள்ளி வயிற்றில் அகில் பிறப்பது போல், சாதாரண குடும்பங்களில் மகா மேதாவிகளும் பிறக்கிறார்கள். இம் மாறுபாடுகளுக்கும்கூட முக்கிய காரணம் சூழ் நிலைதான். பாரம்பரிய நியதியைச் சூழ்நிலை நியதிகள் பெரிதும் பாதிக்கின்றன. இது மானஸ சாஸ்திர ஆராய்ச்சியால் கண்டறிந்த உண்மை.

'கலன் சிதைக்கும் பாலின்சுவையை' அதுபோல கீழ்ப் பட்ட சூழ்நிலைகளின் சேர்க்கை புத்தித்வத்தைக் குறையும்படிச் செய்து விடுகிறது. எந்த மனிதனும் தன் சூழ்நிலையை மாற்றி அமைத்துக் கொண்டால், தான் விரும்பிய படி தன் நிலைமையைச் சீர்திருத்திக் கொள்ளலாம், வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடையலாம் என்று மானஸ சாஸ்திரிகள் முடிவு கட்டியிருக்கிறார்கள்.

மானஸ நூலைக்கற்பதால் சூழ்நிலை எவ்வாறு மனிதனைப் பாதிக்கிறது? சூழ் நிலையில் உண்டாகும் தூண்டல்களால் பிரதிச் செயல் எவ்வாறு நிகழ்கிறது? அச் செயல்களுக்கு முற்பட்ட சிந்தனைகள் எப்படி ஒன்றன் பின் ஒன்

ருக சங்கிலித் தொடர் போல அமைந்து பிரவர்த்தியாகப் பரிணமிக்கிறது? பாரம்பரிய நியதிக்கும் சூழ்நிலை நியதிக்கும் உள்ள சக்திகள் எவை? அவை ஒன்றை ஒன்று எவ்விதம் பாதிக்கிறது? தலைவிதி என்பதன் பொருள் என்ன? எப்படி தலைவிதியை மதி நுட்பத்தால், மானஸ சாஸ்திர அறிவால் மாற்றி அமைக்கலாம்?— என்பன போன்ற அரிய நுட்பமான விஷயங்களை எல்லாம் நன்ருக நாம் அறிந்து கொள்ளமுடியும்.

'உலகம் பலவிதம்' என்பது பழமொழி. ஒருவனைப் போல் இன்னொருவன் இல்லை; தோற்றத்திலும் சரி, அறிவிலும் சரி, குணத்திலும் சரி, மனப் பண்பாட்டிலும் சரி, 'இதுவும் ஒரு பிரகிருதி' என்று சொல்லும்படியாகத்தான் இருக்கிருன். ஒவ்வொரு மனிதனும் மனிதர்களுக்குள் காணப்படும் பிரவர்த்தி வித்தியாசங்களை சகோதர மனப் பான்மையுடன் ஆராய்ந்து அறிவதற்கு மானஸ சாஸ்திரம் மிகவும் உதவி புரிகிறது.

இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் மானஸ சாஸ்திர ஆராய்ச்சியின் மூலம் பற்பல உண்மைகள் வெளியாகி இருக்கின்றன. அந்த உண்மைகளைச் சமூக உயர்வுக்குப் பல வழிகளிலும் உபயோகப்படுத்தி வருகிருர்கள். சூழ்நிலைகள் மானிட வாழ்க்கையைப் பாதித்த போதிலும், அறிவுள்ள மனிதன் சூழ் நிலைகளுக்கு அடிமை ஆகாமல், தன் மனப் போக்கையும், செயல் வகையையும் அமைத்துக் கொள்கிருன்; தன்னேடு உலகமும் உலகத்தோடு தானும் கலந்து வாழ்ந்து மகிழ மானஸ சாஸ்திர உண்மைகளைக் கடைப் பிடித்து ஒழுகுகிருன்.

மனம் தடுமாருது, மனம்போன போக்கெல்லாம் போகாது, மன உறுதி பெற்று, நல் வாழ்வு வாழ மானஸ சாஸ்திரம் இன்றியமையாதது. வாழ்க்கைக்குப் பிரயோசனம் அற்ற பல நூல்களைப் படிக்கிருேம். எந்தக் கல்வி வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமோ, அதைப் படிக்கிறதில்லை. பல்கலைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்களும் 'பல கற்ருேம் யாம்' என்று இறுமாப்புக் கொள்ள வேண்டாம். ஏட்டுக்கல்வி நாட்டுக்கு உதவாது. வாழ்க்கையைப் பண்படுத்தும் கலைகளே மிகவும் முக்கியமானவை. இப்படிப்பட்டவைகளில் ஒன்று மானஸ சாஸ்திரம்.

"தன்னை அறிதல் இன்றிப் பின்னை எது அறிகிலன்?
தன்னை அறிந்திடில பின் என்னை உளது அறிய?"

என்முர் ஸ்ரீ ரமண மகரிஷி. "உன்னை அறிந்து கொள்" என்முர் ஸாக்ரடீஸ் என்னும் கிரேக்க ஞானி. வேதாந்த நுட்பங்களை அறிய முயலாவிட்டாலும், மனதின் இயல்புகளையும், விகாரங்களையும், பண்பாடுகளையும் அறிந்து கொள்வது தனி மனிதனின் வாழ்க்கைக்கும், சமூக நன்மைக்கும் அத்தியாவசியமானது. மனப் பண்புடையவரே மாண்புடையார். அறிவு மட்டும் போதாது: மனப் பண்பும் வேண்டும். மனப் பண்பில்லாதவர் மரம் போல்வர்.

தமிழ் மொழியில் இதுகாறும் மனவிஷயமாக நூலொன்றும் வெளி வரவில்லை. மனத்தின் பல அம்சங்களையும், போக்கையும், சக்திகளையும், எண்ண நிகழ்ச்சித் தொடர்களையும், மற்றும் பலவற்றையும் தமிழ் நாட்டினர் நன்முக அறிந்து கொள்ள மானஸ நூல்கள் வெளியிட இந்த சாஸ்திர பண்டிதர்கள் முன் வர வேண்டும். அப்பொழுதுதான் தாய் மொழியில் விஞ்ஞான சாஸ்திரங்களைக் கல்லூரிகளில் போதிக்க முடியும். இல்லாவிட்டால், தமிழ் மொழியில் கல்வி புகட்ட வேண்டும் என்ற சட்டம் ஏட்டளவோடு சரி; அமுலுக்கு வாராது.

"அன்னியர் அறிவையும் தமிழில் ஆக்கி
....
ஏனைய நாட்டின் எல்லா அறிவையும்
தமிழில் உண்டெனத் தருக்கும் படியாய்
செய்து வைப்பதே தமிழ்மொழிச் சேவை."
—**நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை**

[ஸ்ரீமதி ஆர். எஸ். ருக்மணி, யூனிவர்ஸிடி மானஸ ஆராய்ச்சியாளர். "மானஸ சாஸ்திரம்" என்ற ஒரு நூலை சீக்கிரம் தமிழில் வெளியிடுவார். இதற்குத் தமிழ் நாட்டில் நல்ல ஆதரவு கிடைக்கும் என்று நம்புகிறேன்.]

டி, எஸ். திருமூர்த்தி

குழந்தை மனம்

பத்மா சேஷாத்ரி

"காத்தான்!"

....

"காத்தான்! என்னோடே பேசமாட்டே? இன்னிக்கு செல்வி ஏன் இன்னும் வரல்லே, காத்தான்?"

செடிகளுக்குக் காத்தான் பூவாளியிலிருந்து கொட்டும் ஜலத்துடன் அவன் கண்ணீரும் சேர்ந்தது. ஒரு நீண்ட விம்மல் வெளிப்பட்டது. துன்பம் படிந்த முகத்தை நிமிர்த்தி குழந்தையின் கேள்விக்குப் பதில் சொல்ல வாயெடுத்தான். அதற்குள், "காத்தான்! நீ ஏன் அழறே? செல்வி எங்கே? ஏன் இன்னும் வரவில்லே? காத்தான், நீ அழுதா எனக்கும் அழணும் போலிருக்கு," என்றான் குழந்தை ராஜூ. காத்தான், "சாமிநேத்து ராத்திரியிலிருந்து செல்விக்கு ரொம்ப ஜூரமுங்க. தாயில்லாக் குழந்தை தவிக்குது பாவம். வீட்டில் யாருமில்லே. ஐயா திட்டுவாரென்று நானும் இங்கே வேலைக்கு வந்துட்டேன். குழந்தை தனியா கஷ்டப்படுமே," என்று சொல்லுகையிலேயே அவன் கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்தது. ராஜூவுக்கும் துக்கமாய் இருந்தது. "காத்தான், நீ வீட்டுக்குப்போயேன். ஐயாகிட்டே நான் சொல்லிடறேன். டாக்டரைக் கூப்பிட்டுக் காண்பிச்சியா, காத்தான்?" காத்தான் கண்முன் மிராசு சங்கரையரின் கடினத் தோற்றந்தான் தெரிந்தது. அவரா வீட்டுக்குப் போக அனுமதிகொடுப்பார்? ஈவிரக்கமற்ற பணக்காரருக்கு ஏழைகளின் சுக துக்கங்களைப் பற்றி என்ன கவலே. குழந்தைக்குப் பதில் சொல்ல எண்ணி, "டாக்டருக்குக் கொடுக்க துட்டுக்கு எங்கே போவேன், சாமி. கடவுள் கிருபையிருந்தா

சீக்கிரமே கொணமாயிடும்," என்றான். ராஜு உள்ளே ஓடிவிட்டான்.

* * * *

“ அப்பா !"

“ ஏண்டாப்பா, ராஜு என்ன வேணும், இங்கே வா.”

“ அப்பா ! செல்லிக்கு ரொம்ப ஜுரமாம். ரொம்ப கஷ்டப்படுறாளாம். ஆத்திலே யாருமே இல்லையாம். காத்தான் அழறாம்பா. டாக்டர் கிட்ட காண்பின்னு சொன்னேன். அவன் கிட்ட துட்டே இல்லையாம். அப்பா, அவனுக்குத் துட்டும் கொடுத்து, செல்லிக்கு உடம்பு சரியாகிறமட்டும் அவளை வீட்டுக்கு அனுப்பிச்சிடுப்பா. பாவம், செல்லி நல்ல பொண்ணு. அவளுக்குச் சீக்கிரம் தேவலையானுத்தானே என்னோடு விளையாட வருவா ?" என்று சரமாரியாக ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

"சரிதான் போடா. நீ ஏமாந்த பயல்னு அவன் ஏதானும் புளுகியிருப்பான். வேலைசெய்ய சோம்பலுக்கு ஏதாவது சாக்கு. போ போ, விளையாடு. தன்னாலே நாளைக்கு ஜுரம் சரியாப் போறது, வந்துடுவாள். இதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமா ?". என்றார் மிராசு சங்கரையர்.

"அப்பா, நிஜம்மா ஜுரம்தான். பொய் சொல்ல லேப்பா. நீ சொன்னா டாக்டர் மாமா கேட்பாரே!" என்று மீண்டும் கெஞ்சினான்.

"சரி, இந்த வேலைக்காரப் பயல் பெண்ணுக்காக நான் டாக்டரிடம் போகிறேன்! உனக்கு வேறு வேலை யில்லையடா ? போ, சைகிள் விட்டு விளையாடிண்டிரு."

ராஜு முகம் சுருங்கியது: கண்களில் நீர் அரும்பியது. உடனே ஐயர், சமாதானமாக, “நாளைக்கும் ஜுரம் குறையாமலிருந்தால் பார்த்துக்கொள்ளலாம். இப்போது போ," என்று சொல்லிவிட்டுத் தம் கையிலிருந்த புத்தகத் தில் ஆழ்ந்தார்.

ராஜு அவ்விடத்தை விட்டு மெள்ள அகன்றான். அவனுக்குத் தந்தையின் வார்த்தைகளினால் சமாதான

மூண்டாகவில்லை. அவன் மூளை தீவிரமாக வேலை செய்தது. ஒரு முடிவுக்கு வந்தான். தெருக்கோடியிலிருந்த டாக்டர் வீட்டுக்கு ஓடிச் சென்றான். "டாக்டர் மாமா! டாக்டர் மாமா!" என்றழைத்தான்.

டாக்டர் வெளியே வந்து, "ராஜு, என்ன விசேஷம்? ஏன் என்னைத்தேடிக்கொண்டு வந்தாயப்பா?" என்று அன்புடன் கேட்டார்.

"டாக்டர் மாமா, எங்காத்து காத்தானைத் தெரியுமோன்னோ? அவன் பொண்ணு செல்விக்கு ரொம்ப ஜுரமாம். நீங்கள் போய் பார்த்தேள்னா அப்பாவுக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கும்," என்றான். திடீரென்று ஏழைகளின் வியாதிகளில் எப்படி சங்கரையருக்கு அக்கரை வந்தது என்று வியந்தவாறு, அதற்கென்னடா, இதோ போகிறேன்," என்றார். மாமா, "நானும் உங்களோடே வரட்டுமா? பாவம் அவளுக்குத் துணை யாருமேயில்லையாம்."

"அதெல்லாம் முடியாது. என்ன ஜுரமோ, என்னமோ. நீ வீட்டுக்குப் போ," என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். ராஜு ஏக்கத்துடன் வீடு நோக்கிச் சென்றான். அவனுக்கு இருக்கை கொள்ளவில்லை. "செல்வி தனியாயிருக்கிறாள்" என்ற எண்ணம் அவனைத் துன்புறுத்தியது. அவனுக்கு மீண்டும் ஒரு யோசனை தோன்றியது. உள்ளே ஓடித் தன்னிடமுள்ள ஒரு பெரிய ஸெலுலாயிட் பொம்மையை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். கேட்டின் அருகில் வரும் பொழுது, டாக்டர் திரும்பிப் போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. அவர் கண்களில் படாதிருக்கவேண்டி, பதுங்கி நின்று, அவர் போனபின் வெளியே வந்து, காத்தான் வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

"செல்வி!"

கிழிந்த பாயின் மீது படுத்து முனகிக்கொண்டிருந்தாள் செல்வி. ஜுரத்தினால் சிவந்திருந்த கண்கள் அவனைப் பார்த்தன. "சாமி, ராஜு," என்றாள். அவள் கண்கள் அவன் கையிலிருந்த பொம்மையை வெகு ஆவ

னுடன் நோக்கின. ஏழைகளுள்தான் பரஸ்பரம்! என்ன ஒற்றுமை: தாயில்லாக் குழந்தைக்குத் துணையாக எல்லம்மாள் என்னும் கிழவி உட்கார்ந்திருந்தாள். அவள் ராஜுவைப் பார்த்து, "சாமி, இங்கே எல்லாம் வராதீங்க ஜுரம் ஒட்டிக்கப்போவுது", என்றாள். ராஜு அவ்வார்த்தைகளைச் சட்டை செய்தானில்லை. "செல்வி, நீ தனியாயிருக்கேன்னு காத்தான் சொன்னான். எனக்கு அதை கேட்க ரொம்ப கஷ்டமாயிருந்தது. நான் ரொம்பநாழி இருக்க முடியாது, செல்வி. அப்பா, பாட்டிக்குத் தெரிஞ்சா திட்டுவா. நான் ஒனக்கு உடம்பு சீக்கிரம் தேவலையாகணும்னு டாக்டர் மாமாவைக் கூட வந்து பார்க்கச் சொன்னேன். நான் ஸ்வாமியை ஒனக்கு உடம்பை சீக்கிரம் தேவலை பண்ணணும்னு கேட்டுக்கறேன். செல்வி, இந்தா, இந்த பொம்மையை நீயே வச்சுக்கோ. துணையாயிருக்கும். நான் போறேன். சுருக்க உடம்பு சரியாகி விளையாட வந்துடறயா?" என்று சொல்லி, அவள் அருகில் சென்று அவளிடம் பொம்மையைக் கொடுத்தான் ராஜு. செல்வியின் கண்கள் ஆனந்தத்தால் விரிந்தன. ஆவலோடு தன் கையை நீட்டி வாங்கிக் கொண்டாள். பிறகு, "ஐயா திட்டமாட்டாரா, ராஜு?" என்றாள்.

"செல்வி, அப்பா ஒன்னும் சொல்லமாட்டா. நான் இப்பொ அந்த பொம்மையை வெச்சிண்டு விளையாடறதே இல்லை. நீயே வெச்சிக்கோ," என்றான். எல்லம்மாளும் உணர்சி பொங்க, "சாமி உங்களுக்குத் தங்கமான குணமுங்க. கடவுள் உங்களை நல்லா வெச்சிருப்பார்," என்றாள்.

சாயந்திரம் ஐந்து மணி. தன்னுடன் வயல் பக்கம் அழைத்துச்செல்ல, ராஜுவைத் தேடினார் மிராசு சங்கரையர். அறையில் கட்டிலின் மீது படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான் குழந்தை ராஜு. கிட்டப்போய், "ராஜு", என்றார். ராஜு எழுந்திருக்கவில்லை. தட்டி எழுப்பினார். குழந்தை உடம்பு நெருப்பென சுட்டது. திடுக்கிட்டார் ஐயர். வேலையாளை டாக்டருக்கு அனுப்பிவிட்டு குழந்தை பக்கலில் வந்து உட்கார்ந்தார். அவர் மனம் வெகுவாக அல்லல் பட்டது. இளம் மனைவியை இழந்து

ஒரு வருஷம் கூட ஆகவில்லை; அதற்குள் மற்றொரு கடும் சோதனையா? வைத்த விழி வாங்காமல் ராஜுவைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

டாக்டர் வந்தார். ராஜு விழித்துக் கொண்டிருந் தான். டாக்டர் குழந்தை உடம்பைப் பரிசை செய்து பார்த்ததும், அவர் முகம் கடுமையாக மாறியது. "ராஜு! நீ இன்றைக்கு காத்தான் வீட்டுக்கு போனாயா? உம் சொல்," என்றார்.

"நான் ரொம்ப நாழி அங்கேயே இருக்கல்லே, மாமா. செல்லிக்குத் துணையே இல்லை. காத்தானை அனுப் புன்னு அப்பா மாட்டேன்னுட்டா. தனியா கஷ்டப் படறாளே பாவம்னு என் கிட்ட இருந்த பொம்மையை எடுத்துண்டு போய் கொடுத்துட்டு உடனே வந்துட்டேன். மாமா," என்று தடுமாறிய வண்ணம் சொன்னான். டாக்டர் வெகுநாளைய நண்பராதலால் அவருக்கு ஐயரிடம் பூர்ண சுதந்திரம் உண்டு. கடுங்கோபத்துடன் ஐயர் பக்கம் திரும்பி, "குழந்தையை இப்படிக்கூட பராமுகமாய் விடு வாளா, ஐயர்வாள்? குழந்தை காத்தான் வீட்டுக்குப் போய்விட்டு வந்திருக்கிறான். வீட்டில் ஒருவருக்கும் அது கூடத் தெரியாது. என்னைக் காத்தான் வீட்டுக்குப் போகச் சொல்கிற தற்கும் அவனைத் தவிர உங்களுக்கு வேறு யாரும் அகப்படவில்லை? செல்லிக்கு வந்திருப்பதோ டிப்தீரியா (Diphtheria). இவன் அங்கே போய்விட்டு வந் திருக்கிறானே, நான் என்ன சொல்வது?" என்று வார்த்தை வீசினார். டாக்டர் மருந்து எழுதிக் கொடுத்து மிக்க கவன மாகப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுச் சென் றார். ஐயருக்கு டாக்டர் சொன்னதையெல்லாம் புரிந்து கொள்ள ஐந்து நிமிஷம் பிடித்தது. தன் குழந்தையின் காருண்யம், அன்பு, தயை இவைகளை யோசித்துப் பார்க்கப் பார்க்க அவர் உடல் அவமானத்தால் குன்றியது. "காத் தானைச் செல்லிக்குத் துணையாக வீட்டுக்கு அனுப்பிவிடு என்று சொன்னானே என் கண்மணி என் பணச் செருக் கில் "என்ன பிரமாத ஜுரம்" என்று அவன் சொன்ன தைக் கவனியாமல் போனேனே! அவனுக்கிருந்த தூய உணர்ச்சிகளில் குழந்தை உள்ளத்தின் மேன்மையில், சிறிது பங்காவது என்னிடம் இருந்திருந்தால், இவ்வளவு

தூரத்துக்கு வந்திருக்காதே. ஏழை யென்று புறக்கணித்தேனே ; என் மனம் இப்பொழுது துடிப்பது போலத் தானே காலேயில் காத்தான் மனமும் துடித்திருக்கும்? இந்த உண்மையை நான் உணரவில்லேயே," என்று பலவாறு எண்ணித் துடித்தார்.

அன்றிரவு ஒருவாறு கழிந்தது. மறுநாளும் ராஜூவின் ஜுரம் சற்றும் குறையவில்லே. ஐயர் கவலேயே வடிவமாக அன்னுகாரத்தைத் துறந்து அவனிடமே உட்கார்ந்திருந்தார். தோட்டத்தில் அழுகுரல் கேட்டது. "குழந்தை தூங்குகையில் என்னடா சத்தம்" என்று கேட்டவாறு ஐயர் அறையின் வாசலண்டை சென்ருர். அப்பொழுது அவ்வழியாக வந்த சமையற்காரன், "காத்தான் பெண் செல்வி செத்துப் போயிடுத்தாம். அதற்காக அழுது கொண்டு போகிருன்," என்ருன். "உஸ். இரைந்து பேசாதே. குழந்தை காதில் விழப் போகிறது," என்று சொல்லிக் கொண்டே வந்தார். ராஜூவின் கண்கள் அகலத் திறந்திருந்தன. அப்பொழுது தான் கண் விழித்த அவனுக்கு இவர்கள் பேசியது நன்ருகக் கேட்டது.

"அப்பா!"

"ஏண்டா, கண்ணு! சரியாகவே தூங்கல்லியேப்பா, ராஜு. இன்னும் சற்று நேரம் தூங்குப்பா."

"அப்பா, செல்வி செத்துப் போய்ட்டாளா? அப்படின்ன என்ன அர்த்தம்? செல்வி எங்கே போய்ட்டா?"

"ராஜு! நீ குழந்தை. உனக்கு அதெல்லாம் சொன்னத் தெரியாது. பேசாமல் தூங்கு."

"ஊஹூம். சொன்னல் தான் தூங்குவேன்."

"செல்வி, ஸ்வாமி கிட்ட போயிருக்கான்னு அர்த்தம். ராஜு. இப்போ கண்ணே மூடிக்கொண்டு தூங்கு பார்க்கலாம்."

"ஸ்வாமியே கூப்பிட்டாராப்பா?"

"உம்."

"என்னையும் கூப்பிடமாட்டாரோ?"

அடி வயிற்றிலிருந்து சோகக் கதறல். "ராஜு, இப்படியெல்லாம் பேசாதேடா. சும்மா படுத்துக்கோ. சமத்தோன்னோ."

சிறிது நேரம் மௌனம். "அப்பாடா, தூங்கி விட்டான்" என்றெண்ணினார் ஐயர். அவர் எண்ணத்தைப் பொய்ப்படுத்தி மறுபடியும் ராஜு, "அப்பா" என்றான்.

"உம். இன்னும் தூங்கல்லையாம்மா, நீ?"

"அப்பா, அன்னிக்கு டாக்டராத்திலே வந்திருக்கிற புது மாமி கிட்ட பாட்டி, "ராஜு அம்மா செத்துப் போய்ட்டா"ன்னு சொன்னாளே. அம்மாவும் ஸ்வாமியண்டை தான் இருப்பாளா?"

துக்கம் தொண்டை யடைக்க, "ஆமடா கண்ணே, இனிமேல் பேசக் கூடாது, டாக்டர் மாமா திட்டுவார்."

"அப்பா, நானும் செல்வி, அம்மா, கிட்ட போயிடறேன்."

ஐயர் வாய் விட்டழுதார். "ராஜு! இப்படி யெல்லாம் பேசாதேடா. குழந்தையாய் லக்ஷணமா தூங்கு."

டாக்டருக்கு மீண்டும் ஆளை அனுப்பினார்.

சிறிது நேரம் நிசப்தம்.

ராஜு திடீரென எழுந்து உட்கார்ந்தான். "அப்பா, அப்பா! அதோ அம்மா. அதோ செல்வி. என்னை அவா கூப்பிடறா. அப்பா நான் போறேன்," என்றான். அவன் தலை சாய்ந்து படுக்கை மேல் விழுந்தது. சாளரத்தின் வழியே அஸ்தமிக்கும் சூரியனின் கிரணங்கள் நுழைந்து, அவன் மேனியைப் பொன் மேனியாக்கின.

இரு குழந்தைகளும் பணக்கார - ஏழை வித்யாசமின்றி மீளா நாட்டை நோக்கிச் சென்று விட்டன. பணக்காரத் தந்தை இங்கே கதறுகிறார்; ஏழைக் காத்தான் அங்கே குமுறுகிறான். அவர்களுக்கு ஆறுதலளிப்பார் யார்?

கலைஞன் காதல்

இர்ராஜ அரியரத்தினம்

மகனின் கன்னங்களைத் தடவிக்கொண்டிருந்தாள். ஐந்து மாதங்களுக்கு முன்னர் வாலிப முறுக்குடன் சுறுசுறுப்பாகத் திரிந்த செல்வனின் களைவீசும் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு எவ்வளவு பெருமையாக விருந்தது. அதே வாலிபன் இன்று பாயும் படுக்கையுமாக வாடி வதங்குவதை அவள் எப்படிச் சகிப்பாள்!

வேலையில்லையே என்று விசனித்த காலம்போய், "அப்பனே, எனது மகன் உயிருடன் வாழ்ந்தால் போதும்" என்று பிரார்த்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. வேலையொன்று கிடைக்கும் அதனேடுகூட வியாதியும் வரும் என்று யார் கண்டார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர்தான், இருவரும் பழைய மண்வீட்டைவிட்டுச் சிறியதோர் கல்வீட்டை வாடகைக்கு அமர்த்தி அங்கு வசித்து வந்தார்கள்.

அதிகாலையில் எழுந்து மகனுக்குக் காப்பி தயாரிக்க வேண்டும். மகனை எழுப்பிவிட்டு அடுக்களைக்குள் புகுவாள். இவனும் அவசர அவசரமாக எழுந்து, ஆக வேண்டியவற்றை முடித்துவிட்டுக் காரியாலயத்துக்குப் புறப்படுவான். புகைவண்டிப் பிரயாணம் அவனுக்குச் 'சீ' என்றுவிட்டது. தினசரி பாய்ந்து விழுந்து ஓடுவதென்ருல் கொல்லக் கொண்டுபோவது போலத்தானிருக்கும். இருந்தாலும், மனதுக்குகந்த வேலை யென்றபடியால் ஏனைய அலுப்புகளை அவன் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

தாராளமான சம்பளமும் குசாலான ஜீவியமும் நடத்துவதற்குப் போதிய சந்தர்ப்பங்களும் வசதிகளுங் கிடைத்தவிடத்தும் அவனுக்கு அவற்றில் மனம் செல்லவில்லை.

இரவு பகலாகக் கற்பனை உலகிற் சஞ்சரித்து காவியப் பூங்காவிற் களித்துத் திளைக்கும் உள்ளத்துக்குக் கலைப் பண்பு நிறைந்திருப்பது நூதனமல்ல.

ஏனையோரால் அனுபவிக்கமுடியாத ஒரு தனி இன்பத்தை வாழ்க்கையின் செல்வமெனக்கருதிப் பெருமையடைந்துவந்த ஒருவனைப் பார்த்துத்தானா, கடவுள் வியாதியையுங் கொடுக்க வேண்டும்? அதுவும் அரும்பிவரும் வேளையில், புகழின் படிகளில் அடிமேல் அடிவைத்துக் கொண்டிருக்கும் வேளையிலா வியாதி அவனைப் பிடிக்க வேண்டும்.

* * * *

கட்டிலின் அருகே தாயார் இருந்துகொண்டு கன்னங் களைத்தடவுவதை அவன் நன்றாக உணர்வான். இருந்தும் வாய்திறந்து நாலுவார்த்தை பேச முடியவில்லையே! பக்கம் பக்கமாக எழிதித்தள்ளிய கை அந்த வேளையிலும் விறு விறுத்துக் கொண்டிருந்தது. ஒருசில நிமிஷத்துக்குப் பேனா பிடிக்கும் சக்தி கிடைத்துவிட்டால் தாயின் அன்பைப் பிழிந்து ஒரு கலைக்கடிதம் பெய்து அவளின் காலடியிற் சூட்டி மகிழ்ந்திருப்பான்.

அதுதான் இப்போது அவனால் முடியாத காரியமாகி விட்டதே! 'அற்புதம், ஆனந்தம், அபாரம்! அழகாக விருக்கின்றது. உனது எழுத்துக்களை நன்றாக அனுபவிக்கின்றோம்," என நண்பர்கள் அடுக்கிக் கொண்டுபோகும் கடிதங்களை மீண்டும் ஒரு முறை வாசித்து ஆறுதல் பெறுவதற்கு இறைவன் ஒரு சந்தர்ப்பம் அளித்தால்......

* * * *

அன்று இப்படி ஒரு நாளும் நிகழவில்லை. வெளுறிய கன்னங்களைத் தடவிக் காய்ந்துபோன அச் சுள்ளி விரல்கள் கசிந்து குளிர்ந்தன. கண்ணீர் கன்னங்களை நனைப்பதைக் கண்டு, "மகனே! மகனே! இது என்ன?" என்று கொஞ்சும் மொழிகளிற் பதட்டத்துடன் கேட்டாள்.

அவனால் பேச முடியவில்லை. முயற்சித்தும் வாய்க்கவில்லை. தலையணைக்குக் கீழ் உள்ள ஏதோ ஒன்றை ஒரு முறை வாசித்தாலோ என்று அவனுடைய மனம் அங்க

லாய்த்தது. துடிதுடிக்கவும் சக்தியற்ற அந்த உள்ளத்துக்கு அவ்வளவு வேகம் அன்று எங்கிருந்து வந்தது? மகனின் தாகத்தை ஒருவாறு அறிந்த தாயார் தலையணையை மெதுவாக உயர்த்தி மடிக்கப்பட்டிருந்த ஒரு தாளை எடுத்தாள். மடிப்புகள் நன்றாக படிந்துவிட்டன. ஓரங்களெல்லாம் பிசங்கி பிசு பிசு வென்று இருந்தன.

"சற்றுப் பொருத்துக்கொள் ராசா; வந்துவிடுகின்றேன்" என்று சொல்லித் தாயார் மகனுக்கருகே மூக்குக் கண்ணாடியுடன் திரும்பினாள். வெள்ளிக் கம்பிகளாற் கட்டப்பெற்ற கண்ணாடியை அணிந்துகொண்டு கடிதத்தை வாசித்தாள். ஆம்; அறுத்துறுத்து மெல்ல மெல்ல வாசிக்கின்றாள்.

அன்புள்ள பிருதிவிராஜ்,

எப்படி, சௌக்கியந்தானே! இவ்வளவு காலமாக மௌனமாக இருந்துவிட்டோம். இருவரும் கடைசியாகப் பேசி மகிழ்ந்தது எனக்கு நேற்றுப்போலிருக்கிறது. பிரயாணமாவதற்கு முதல் நாள் என்னை இறுக அணைத்து எனது இதழ்களில் தேன்ஊறச் செய்தாய். இருவரும்தான் இனிமையை நன்றாக அனுபவித்தோம். பால்போன்ற நிலவினிலே நிகழ்ந்த இந்த விருந்து வைபவம் எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவம். உனக்கும் அப்படித்தான் இருக்குமென்று நம்புகின்றேன்.

நீதான், உன்னை ஒரு கலைஞன் என்று சொல்லி பெருமையடைந்து கொள்ளுகின்றாய். அதில் ஒரு இன்பம் உனக்கு. இதனால் எனது ஞாபகம் உனக்கு எப்படி உதிக்கும்? சென்னை வந்து இப்போது ஆறு மாதங்களாகின்றன. கடற்கரைக்குக்குச் சமீபமாக எங்களுக்கு ஒரு சிறு வீடு அகப்பட்டிருக்கிறது. சென்னையில் இப்போது வீடு அகப்படுவது மகா கஷ்டம்.

இங்குள்ள எழுத்தாளர்களினதும், பத்திரிகை ஆசிரியர்களினதும் நட்பு அப்பாவுக்கு அபரிமிதமாகக் கிடைத்திருக்கின்றது. இடையிடையே இசைக்கச்சேரிகளுக்கும் செல்லுகின்றோம். நேற்று முன்தினமும்

ஸ்ரீ சடகோபனின் இசைக்கச்சேரியைக் கேட்டு மகிழ்ந்தோம்.

இப்போது என்னவோ, நான் உன்னை மணந்து கொள்ளுவதை அவர் விரும்புகிருர். அம்மா, அரசாங்க உத்தியோகம் பார்க்கும் ஒரு 'மருமகனை'த்தான் பார்த்துக்கொண்டிருக்கிருள். அடுத்த வீட்டுப் பெண்ணுக்கு ஒரு நல்ல 'பையன்' அகப்பட்டிருக்கின்ருன். அவனும் உன்னைப்போல் ஒரு பத்திரிகை ஆசிரியன். நல்ல சம்பளம். போதிய செல்வாக்கு மிருக்கின்றது. அத்துடன் ஒரு 'கார்'கூட வைத்திருக்கின்ருன். காரிலே தான் காரியாலயம் செல்வது. பத்திரிகை ஆசிரியன் பணக்காரனுக விருப்பதைப் பார்த்து அம்மா ஆச்சரிய மடைகின்ருள்! நீ, கூட ஒரு 'கார்' வைத்து பகட்டாகத் திரிந்தால் அம்மா மறுபேச்சின்றி உன்னை ஏற்றுக் கொள்ளுவாள்! ஆமாம், மருமகனுக......! பாவம். அதற்கு இலக்கியத்தைப்பற்றியும் கலையைப்பற்றியும் என்ன விளங்கப்போகின்றது.

நாம் இருவரும் கொடுத்துவைத்துப் பிறந்திருக்கின்ருேம். உண்மையாகச் சொல்லுகின்றேன் அம்மாளுக்கும் இப்போது சம்மதந்தான்.

இந்த மாதம் சென்னையில் எழுத்தாளர் மகாநாடு நிகழவிருக்கின்றது. நீ இதைப்பற்றி முன்னதாகவே அறிந்திருப்பாய். தீபாவளியை, நீ இம்முறை சென்னையில் கொண்டாடினுல் என்ன? தலைத் தீபாவளியை யாழ்ப்பாணத்தில் வைத்துக்கொள்ளலாம்.

பிருதிவிராஜ்! நீ காப்பிப் பிரியன் என்பதை அனைவரும் அறிவார்கள். இது எனக்குந் தெரிந்த இரகசியந்தான். நான் இங்கு வந்தபின் ருசியான காப்பி தயாரிக்கப் பழகியிருக்கின்றேன். அம்மாவுக்கே இது அதிசயமாக விருக்கின்றது. எங்களுக்கு ஒரு சோனுசலம் அகப்பட்டிருக்கின்ருன். அவன் மல்லிகைப் பூப்போன்ற இட்டிலி செய்து எங்களை யெல்லாம் அற்புத உலகிற்கு அழைத்துச் செலலுகின்ருன்!

எங்களுக்கும் வசந்த காலம் நெருங்குகின்றது. 'காதலன்' என்று உன்னைச் சொல்ல நான் விரும்பவில்லை. 'அன்புள்ள பிருதிவிராஜ்' என்று சொல்லுவதில் எனக்கு ஒரு இன்பம்.

நீ இங்கு வரும்போது மாமியையும் கூட்டிக்கொண்டு வா. மாமிக்கு யாழ்ப்பாணத்தை விட்டுப் பிரிய மனம் வராதுதான். அம்மாவுக்கு அப்படித்தான் இருந்தது ஆனால் இப்போது அவளுக்குச் சென்னைச் சீவியம் பிடித்துக்கொண்டது. 'ரேஷன்' காலத்தில் இப்படி யென்றால் பழைய நிலைமைக்குச் சென்னை மாறிய வுடன் வாழ்க்கை வெகு 'குஷி'யாக விருக்குமல்லவா? அத்துடன் நீயும் சேர்ந்துவிட்டால்......! நீண்ட கடிதம் எழுதி உனக்கு அலுப்பு உண்டாக்க நான் விரும்பவில்லை. உடம்பைக் கவனித்துக்கொள். இரவில் அதிக நேரம் இருந்து எழுத வேண்டாம். கிரமமாகப் பால், பழம் சாப்பிட்டுக்கொள்.

சரி, இனி என்ன? பிரயாணத்துக்கு ஆயாத்தமாக வேண்டியதுதானே! மாமிக்கு எனது அன்பு. முத்தத் துடன்.

உனது

சகுந்தலா.

* * * *

கன்னங்களில் வழிந்த நீரைத் துடைத்துவிட்டு "என் கண்ணே!" என்று மகனின் முகத்தை மெதுவாகத் தடவினாள். போதும். இனி உன்னுடன் இருந்து மகிழ முடியாதென அவனுடைய விழிகள் பேசின. "ஆசை மகனே! என் கலைச்செல்வமே!" என்று புலம்பி மகனைக் கட்டி அணைத்தாள்.

மறுதினம் அவனுடைய இலக்கிய நண்பர்களும் இரசிகர் களும் வேறு அன்பர்களும் மலர்க்குவியலுக்குள் மறைந்துகிடந்த அக்கலைஞனின் உடலைத் தரிசிக்க முந்திக் கொண்டார்கள்.

* "மாண்டவர்கள் பெயர்களிலே மலைக்க வேண்டாம்
மலரிட்டு அவருருவை மறைக்க வேண்டாம்

....

கானரிய அறிஞரெனக் கூதற வேண்டாம்
கல்லாலே சிலை செய்து வைக்க வேண்டாம் *

....

எனப் பாடிக்கொண்டே தனது காணிக்கையுஞ் செலுத்து வதற்குக் கவிஞன் ஒருவனும் அக் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டான்......

வாழ்க்கைப் பாதை

வி. எஸ். சுப்பையா

கோபாலன் அந்த நாடகத்தை சுமார் இரண்டுமாத காலமாக இராப்பகலாய் எழுதி முடித்தான். அதற்குப் பின் அந்த நாடகத்துக்குப் பெயரிட அவன் பட்ட கஷ்டம அவனுக்குத்தான் தெரியும். 'கதை, எழுதுவது கூட சுலபம்; அதற்குப் பெயரிடுவதுதான் பெரிய கலை,' என்று யாரோ ஒருவர் சொன்னதுகூட அவன் ஞாபகத்துக்கு வந்தது. முடிவில் ஒருவழியாக 'வாழ்க்கைப் பாதை' என்று நாமகரணம் சூட்டினன். "தை" என்ற எழுத்தை எழுதி முடித்துவிட்டு நிமிர்ந்து அலாரத்தைப் பார்த்தான். மணி ஒன்று—இரவு.

கோபாலன் இதற்கு முன்னல் இரண்டு மூன்று நாடகங்கள் எழுதிமுடித்திருந்தான். அவை கீழ்த்தரமான கற்பனைகளாகவும், பொருத்தமற்ற வசனங்கள் உள்ளதாயும் அவனுக்கே பட்டதால் அவைகளை அக்னி பகவானுக்குச் சமர்ப்பித்துவிட்டான். ஆனல் இந்த வாழ்க்கைப் பாதைக்கு யாவும் சரியாக அமைந்துவிட்டன. பாத்திரங்கள், அவர்களின் தனித்தனி குணதிசயங்கள், கம்பீரமான வசன நடை, இனிமையான கதைப்போக்கு இவைகளைச் சுற்றுக் கட்டாகக்கொண்டு மத்தியில் வைரத்தைப் பதித்தாற்போல முடிவும் அமைந்துவிட்டது. அவன் மகிழ்ச்சி எல்லை கடந்துபோயிற்று.

கோபாலன் மோஹன் கம்பெனியின் பிரதம நடிகன். நாடகத்தில் தான் அடைந்த அனுபவங்களையெல்லாம் வாழ்க்கைப் பாதையில் வாரிக்கொட்டி அதைச் செப்பனிட்டிருந்தான். மறுநாள் அதிகாலையில் மீண்டும் ஒருதரம் சரசரவென்று அதைப் படித்துவிட்டு ஒரு பெருமூச்சு

டெல்ஹி அகில இந்திய ரேடியோ A. S. I. S-ல் ஒலி பரப்பப்பட்டது. பிரசுர அனுமதி பெற்றது.

விட்டான் ஆ! தன்னுடைய நாடகம் மோஹன் கம்பெனி மேடையிலேயே நடிக்கப்பட்டால்! அதை நினைக்கையிலேயே மெய்சிலிர்த்தான். பிரதியை எடுத்துக் கொண்டு புரொப்ரைட்டரைப் பார்க்க அவர் ஜாகைக்கு ஓடினன்.

ஆனல் மோஹன் கம்பெனி புரொப்ரைட்டர் நாக ராஜ முதலியாருக்குக் கோபாலன் ஒரு வேண்டாத மனிதன். காரணம், தன் சம்பளத்தைச் சற்று உயர்த்த வேண்டுமென்று அவன் அடிக்கடி கேட்டுக்கொண்டே வந்ததுதான். தன்னைவிட்டால் மோஹன் கப்பெனிக்கு வேறு வழியில்லை என்றாலும் அதைவிட்டால் தனக்கும் மறுபுகல் இல்லை என்பதையும் அவன் நன்கறிவான். இருந்த நாடகக் கம்பெனிகள் எல்லாம் ஒவ்வொன்றாகக் கலைந்து போய்விட்டன. எங்கேயாவது சினிமாவில் சேர்ந்துகொள்ளலாமென்றாலும், அப்போது மேடையி லிருந்து திரைக்குச் சென்றவர்களுக்குப் பத்திரிகைக ளெல்லாம் ஒரே 'டோஸ்' விட்டுக்கொண்டிருந்தன. 'அமெச்சூர்' நடிகர்களுக்கே பேர், புகழ், கிராக்கி எல்லாம்! இந்த நிலையில் மோஹன் கம்பெனி நிழலி லிருந்தே இன்னும் கொஞ்ச காலத்தைக் கழிப்பதென்று கோபாலன் முடிவு செய்திருந்தான்.

கோபாலனைக் கண்ட புரொப்ரைட்டர் முதலியார் தமது முகத்தைச் சுழித்தார். "சம்பளத்தை அதிகப் படுத்த வேண்டும், இல்லாவிட்டால் போய்விடப் போகிறேன்," என்று சொல்லத்தான் வருகிறான் என்று நினைத்துக்கொண்டார். எங்கேயெல்லாமோ சினிமா டைரக்டர்களுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான் என்ற புகார்களும் அவர் ஞாபகத்திற்கு வந்தன.

"வா, கோபாலா! என்ன அதிகாலையில் வந்தது? நாளை என்ன தசாவதாரமா? உனக்குத்தான் ரொம்ப சிரமம்," எனறு சாமர்த்தியமாய் ஆரம்பித்தார் முதலியார்.

"ஆமாம், சிரமத்தைப் பார்த்தால் முடியுமா? உம்.... புராண படங்களில் வசூல் எப்படி? 'ராஜாம்பாள்'

நடித்த அன்றுகூட கிருஷ்ணலீலாவுக்குக் கூடியதுபோல கூட்டம் ஜாஸ்தியாகத்தானே இருந்தது?" என்றான் கோபாலன்.

வேலையாள் முதலாளியிடம் இப்படியா வசூல் விஷயங்களிலெல்லாம் நுழைவது? முதலியாருக்கு உள்ளுக்குள்ளே வந்த எரிச்சலை எதற்கு ஒப்பிடுவது? கோபாலனுக்கு அதில் துளி தெரிந்திருந்தால் போதும்; உடனே அந்தப் பேச்சை நிறுத்திக்கொண்டிருப்பான்.

முதலியார் பேசினார்: ஆமாம். என்ன இருந்தாலும் கிருஷ்ணலீலாவைப்பற்றி நம்ப கம்பெனிக்கு ஒரு அலாதி மதிப்பு இருக்கத்தான் இருக்கு. அதைப்பற்றிச் சந்தேகமே இல்லை. இதுக்கு முன்னால் எத்தனையோ நாடகக் கம்பெனி இந்த தாத்துக்குடிக்கு வந்திருக்கு; ஆனால், நம்ப கிருஷ்ணலீலாவுக்கு வந்த கூட்டத்தைப்போல வேறே எதுக்குமே கிடையாதாம். கம்ஸன் வேஷத்திற்கு மட்டும் கொஞ்சம் பருத்த ஆசாமியாக இருந்தால் எவ்வளவோ சோபிக்கும். அதிலும், கோபாலா, நீ மட்டும் இன்னும் கொஞ்சம் மனசுவைத்தால் ஊரே புரண்டு கொட்டகைக் குள் வந்துவிடாதா, என்ன? என்று ஒரு தினுஸாகச் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

கோபாலன் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. ஆனால், தன் மனதிற்குள் மட்டும், "நீர் இருக்கிறீரே. இரண்டு கம்ஸனுட்டம், போடுகிறதுதானே அந்தக் கம்ஸன் வேஷத்தை," என்று நினைத்துக்கொண்டான். பின்பு, அவன் 'வாழ்க்கைப் பாதை' பிரதியை எடுத்து அவரிடம் நீட்டி, "இந்த நாடகத்தை நான் எழுதி முடித் திருக்கிறேன்; இதை நம் சபாவிலேயே நடிக்க ஒரு நாடக மாகச் சேர்த்துக்கொள்ளவேணும்," என்று பணிவுடன் சொன்னான்.

முதலியார் ஆச்சரியமடைந்துபோனார். 'ஏது, பலே பேர்வழியாக இருக்கிறானே,' என்று நினைத்தபடியே பிரதியை வாங்கிக்கொண்டார். கோபாலன் அரைகுறை யான மனதோடு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பினான். கோபாலன் சென்ற பிறகு முதலியார்

அதில் ஒரு இரண்டு மூன்று பக்கம் படித்திருப்பார். அதற்குள் மணி வந்து சேர்ந்தான்.

மணி முதலியாரின் தங்கை பிள்ளை. நாடகங்களில் அவன்தான் 'வில்லனாக' (போக்கிரியாக) நடிப்பது. நாடகங்களில் வரும் கொலைகளோடு, ராகங்களையும், சம்பாஷணைகளையும் கொன்று மோஹன் கம்பெனி நாடக மேடையை ஒரே கொலைக்களமாக ஆக்கிவந்தது சாக்ஷாத் இந்த மணிதான். உள்ள வசனங்களை அடியோடு மறந்து விட்டு பொருத்தமில்லாமல் உளறுவான். பாவம், சில்லரை நடிகர்கள்பாடு திண்டாட்டமாகிவிடும்! முதலாளியின் மருமகன் என்ற ஹோதாவில் அவனுடைய ஆர்பாட்டம் அபரிமிதமாக இருந்தது. மற்றவர்கள் சற்று ஒதுங்கியே நடந்து வந்தார்கள்.

ஆனால் அவனுடைய வாய்வீச்சுகள் மோஹன் கம்பெனி பிரதம நடிகையான சாரதையிடம் மட்டும் செல்லவில்லை. அவனுடைய ஆர்பாட்டங்களும் செயல்களும் அவன் மீது அவள் கொண்டிருந்த வெறுப்பைத்தான் அதிகப்படுத்திக்கொண்டு வந்தன. முதலியார் அவன் மேல் கொண்டிருந்த அன்பினால்தான் தன் வெறுப்பை அதிகமாகக் காட்டிக்கொள்ளாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்திருந்தாள்.

சாரதை நாகராஜ முதலியாரின் ஏக புத்ரி. இயற்கையாகவே அவளுக்கமைந்திருந்த இனிமையான சாரீரம், மென்மையான உடலமைப்பு இவைகளோடு, சிறுவயதிலேயே மேடை ஏறியதால் நடிப்பில் நுட்பமான திறமையும் பெற்று விளங்கினாள். மோஹன் நாடகக் கம்பெனி விஜயஞ்செய்த ஊர்களிலெல்லாம் அவர்களுக்குப் பெரும் புகழ் கிடைத்தது முக்கால்வாசி சாரதையாலேதான்.

தூத்துக்குடிக்கு மோஹன் கம்பெனி வந்த சமயம் சாரதைக்கு வயது பத்தொன்பது. பெண்மையின் பூரண அழகும் அவள் மேனியில் பிரகாசிக்கத் தொடங்கியிருந்த சமயம் அது. இரண்டு நாடகங்களே அந்த ஊரில் நடத்தியிருந்தார்கள். அதற்குள் தூத்துக்குடியிலும் அதைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலும் சாரதையைப்பற்றி

தான் பேச்சு. அவளுடைய சிறந்த நடிப்பு, ஒப்பற்ற சாயல், பாடும் தோரணை ஆகிய இவைகள் யாவும் நாடக அபிமானிகளிடத்தில் ஒரு புரட்சியை உண்டுபண்ணி விட்டன. இதன் பலன் நாடகத்திற்கு நாடகம் வசூல் அதிகரித்துக்கொண்டு வந்தது.

கோபாலனே தன் முழுத்திறமையுங் காட்டலானான். சாரதைக்கு இணையாகக் கோபாலன்தான் நடிக்க முடியும் என்ற ரீதியில் அமைந்தது அவனுடைய பாவ உணர்ச்சிகள் நிறைந்த நடிப்பு.

மாதம் அறுபது ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த கோபாலனுக்கு சாரதையோடு தான் நடிக்க நேர்ந்ததுதான் ஆறுதல் அளித்தது. இப்போது, அவளோடு மேடைமீது நிற்கும் நேரங்களிலெல்லாம், என்னவென்று சொல்ல முடியாதபடி மெய்சிலிர்த்துப் பரவசமானான். அன்றொரு நாள் நள—தமயந்தி நாடகத்தில் வரும் சுயம்வரக்காட்சியில், தமயந்தி வேஷத்தோடு ஸ்ருங்காரமாகக் கலீர் கலீர் என்று நடந்து வந்து சாரதை தனக்கு மாலையிட்டாளே—அந்தக் கம்பீரத்தையும் அப்பொழுது அவள் கண்களில் ஜ்வலித்த நட்சத்திர ஒளியையும் அவனால் மறக்க முடியுமா? நான்கு வருஷங்களுக்கு முன்னால் திருச்சியில் "பால்ய விவாஹம்" என்று ஒரு நாடகம் நடத்தினார்கள். அப்பொழுது மேடையில் குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருந்த சாரதை எங்கே! இப்பொழுது அழகையெல்லாம் வாரிப் பூசிக்கொண்டு பரிமளித்துக்கொண்டு நிற்கும் சாரதை எங்கே!

சாரதையின் நிலையும் அவ்வாறுதான் ஆயிற்று. அவனுடைய சாதுரியமான நடிப்பின் முன் சாரதை தன்னை அடியோடு மறந்து தான் மேற்கொண்டிருக்கும் பாத்திரத்தோடு ஒன்றிப்போவாள். அவளுடைய பருவ மனதில் வெடித்த அன்புக்கொடி கோபாலனைத் தழுவிச் செழித்துப் படருகிறது என்பதைக் கவனிக்க மற்ற சக நடிகர்களுக்கு நெடுநாளாகவில்லை.

மணி இதை அறிந்தபோது நெருப்பிலகப்பட்ட புழுப் போல் துடித்தான். பற்களை நெற நெற வென்று கடித்

தான். சாரதையைக் கோபாலனோடு சேர்த்து நடிகர்கள் ஒருமாதிரியாகப் பேசுவதை மாமாவிடம் சொல்லி வயி றெரிந்தான். அப்போதுதான் முதலியாரின் மனமும் துணுக்கென்றது. முதலிலிருந்தே கோபாலன் என்றால் வெறுப்புக்கொள்ளும் அவருக்கு மணியின் போதனை அந்த வெறுப்பை மிகவும் கூர்மையாக்கிற்று. என்றாலும் பிரதம நடிகனை அவனைத் திடீரென்று சபாவைவிட்டு எப்படி விலக்கிவிட முடியும்?

ஆகவே, கோபாலன்மேல் அப்படி எரிந்துகொண் டிருந்த மணியிடம் அவன் எழுதிய நாடகத்தைப் பற்றிச் சொன்னால் அவனுக்கு எப்படி இருக்கும்? அந்த சமயத் தில் சாரதையும் தபால்காரன் கொடுத்த சில கடிதங் களோடு அங்கு வந்து—

"என்ன அப்பா சமாச்சாரம்?" என்று கேட்டாள்.

முதலியார் அவளிடத்திலும் விஷயத்தைச் சொன்னார். அவள் உடனே, "ஆமாம் அப்பா, என்னிடத்தில்கூட கோபாலன் ஏதோ ஒரு சமூக நாடகம் தான் எழுதிக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். குப்பைக் கதைகளையெல்லாம் சுருட்டி வைத்துவிட்டு இந்தமாதிரி புதுசு புதுசாகப் போட்டால்தான் நல்லது," என்றாள்.

மணியின் எரிச்சலில் எண்ணெயை ஊற்றியது போலிருந்தது சாரதையின் இந்த வார்த்தைகள்.

"புராண கதையானால் சுலபமாகச் சமாளித்துக் கொண்டு போய்விடலாம்," என்றான் மணி.

"அதிருக்கலாம்; ஆனால் சமூகக் கதைதான் ஜனங் களுக்குப் பிடிக்கிறது. நானும் பார்க்கிறேன் : பதிபக்திக்கு வருகிறதுபோல பவழக்கொடிக்குக் கூட்டம் வருகிற தில்லை," என்றாள் சாரதை.

"அது சரிதான், மாமா, ஆனால் இந்தக் கோபால னுக்கு என்ன கதை எழுதத் தெரியும்? ஏன் வீண் சிரமம்?" என்று மணி அலட்சியமாய்ச் சொன்னதும், சாரதை, "மணி, உனக்கு எது இல்லாவிட்டாலும்

பொறுமை வேண்டிய மட்டும் இருக்கு,'' என்றாள் முகம் சிவக்க. மணி வாயடைத்துப்போய் மாமா முகத்தைப் பார்த்தான். மாமா உத்திரத்தைப் பார்த்தார். சாரதை அவருடைய கையிலிருந்த கையெழுத்துப் பிரதியை எடுத்துக்கொண்டு, "அப்பா, நான் படித்துப் பார்த்து விட்டுச் சொல்லுகிறேன்,'' என்று கூறிவிட்டு பின்கட்டுக்குப் போய்விட்டாள்.

வாழ்க்கைப்பாதை நாடகம் மிகவும் ஸ்வாரஸ்யமான போக்கில் அமைந்திருந்தது. கதாநாயகர்கள் சிறந்த குணாதிசயங்களைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்கள். சம்பவங்களும், சம்பாஷணைகளும் தத்ரூபம். அந்த நாடகத்தை எப்படியும் தூத்துக்குடியிலேயே நடத்தும்படி தகப்பனாரிடம் சொல்ல வேண்டுமென்று சாரதை தீர்மானித்துக்கொண்டாள்.

முதலியாருக்கு உள்ளுக்குள் அந்த நாடகத்தைச் சபாவில் நடத்த இஷ்டமில்லை. என்றாலும், சாரதையிடம் அதை வெளிப்படையாகச் சொல்லவில்லை ஆனால் சபாவின் நாடக வாத்தியாரான முத்துசாமிப் பாவலரும் அதிலுள்ள சிறந்த அம்ஸங்களை எடுத்துச்சொன்னதால் முதலியார் மேலும் மறுதலிக்க முடியாமல் ஒப்புக்கொண்டார்.

ஆனால், வாழ்க்கைப்பாதையை நடிக்கத் தீர்மானித்து ஒத்திகை ஆரம்பித்ததிலிருந்து மணி சுண்ணாம்புக் கால்வாயாக எரிந்துகொண்டிருந்தான். சாரதாவை மணந்துகொள்ள கோபாலன் செய்த சூழ்ச்சி இது என்பது அவனுடைய முடிவு. வாழ்க்கைப் பாதையின் கதாநாயகி மீனலோசனி சாரதையையன்றி வேறு யார்? சாரதையோடு மாமாவின் நாடகத்தால் திரண்ட சொத்து முழுவதையும் கோபாலன் அபகரித்து விடுவதற்குள் அவனை விரைவில் அங்கிருந்து விரட்டிவிடத் தீவிரமாக யோசித்து உறுதியான ஒரு முடிவுக்கு வந்தான்.

வாழ்க்கைப்பாதை நாடகம் நடித்த அன்று கொட்டகையில் கூட்டத்தை அளவிட முடியவில்லை. சாரதை மிகவும் மகிழ்ச்சி பொங்கியவளாய் கதாநாயகியை உருவ

கப்படுத்தியபடி நடித்துக்காட்ட மணிக்குத் தாளமுடியாத ஆத்திரம். அடிபட்ட புலிபோல அங்குமிங்கும் சீறிக் கொண்டு திரிந்தான். அப்போது அவன் சிரித்த 'வில்லன் சிரிப்பு' உண்மையிலேயே மஹா கோரமாக இருந்தது.

மணியடித்து திரை தூக்கப்பட்டது.

'வாழ்க்கைப்பாதை'யின் முதல் இரண்டு சீன்களும் ஜோராக முடிந்துவிட்டன. மூன்றாவது சீனில் ஒரு குழப்பத்தை நடிக்க வேண்டும்.

> "கதாநாயகியின் வீட்டில் நடந்த ஒரு தேக் கச்சேரியில் கதாநாயகன் கலந்துகொள்ளுகின்றான். அவன் அருந்திய தேனீரில் மட்டும் மயக்க மருந்து கலக்கப்பட்டிருக்கிறது. அதனால் குழப்பம் நடக்கிறது,"

என்பது அந்த மூன்றாவது சீன்.

மோஹன் கம்பெனி நாடக மேடையில் நடிக்கப் பட்ட அந்த குழப்ப சீன், அந்த நாடகக் கம்பெனி உலைந்து போவதற்கே காரணமாக முடிந்தது. எப்படி யெனில் கதாநாயகனை நடித்த கோபாலன் குடித்த தேனீரில் உண்மையாகவே மயக்க மருந்து கலக்கப்பட்டிருந்தது.

மயங்கி விழுந்த கதாநாயகன் அப்படியே விழுந்து கிடந்தான். திரையைப் போட்டுவிட்டு கூடிய மட்டும் எழுப்பினார்கள். முகத்தில் தண்ணீர் அடித்துப் பார்த்தார்கள். நெடுநேரமாகியும் கண் திறக்கவில்லை. இதையறிந்த ஜனங்களிடையில் குழப்பமும் கூக்குரலும் கிளம்பி அதிகரித்தன. நாடகக் கொட்டகைகளில் குழப்பமும் கூச்சல்களும் ஏற்பட்டால் அவை எப்படி இருக்கும் என்பதை விவரிக்க வேண்டியதில்லை. டிக்கட்டை வாபஸ் பண்ண வேண்டுமென்று ஒரு பக்கம் கூச்சல். மற்றொரு பக்கம் நாடகத்தை முடிக்காவிட்டால் நாடகக்காரர்களை லேசில் விடுவதில்லை என்ற அரட்டல். இதனிடையில் தரைக்கும் பெஞ்சுக்கும் மத்தியில் போட்டிருந்த வேலியை முறித்துக்கொண்டு தரை மஹா ஜனங்கள் மேடையை நோக்கி முன்னேறி வந்தார்கள். முதலியார்

சாரதையையும் மற்ற இரு நடிகைகளையும் பந்தோபஸ்தாக தாங்கள் தங்கியிருந்த ஜாகைக்கு அனுப்பிவிட்டு குழப்பத்தைச் சமாளிக்க முனைந்தார். இனிமேல் நாடகம் நடக்காது என்று அறிந்து வீட்டை நோக்கி புறப்பட்டவர்களில் சிலர் கையிலகப்பட்ட மலைப்பிஞ்சுகளை எடுத்து நாடகக் கொட்டகையின் கூரை தகரத்தால் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவித்துவிட்டுச் சென்றார்கள்.

'வாழ்க்கைப்பாதை' நாடகத்தோடு மோஹன் கம்பெனி தூத்துக்குடியிலேயே உலைந்து போயிற்று. முதலியார் சமய சஞ்சீவியாகக் காரியங்களைச் செய்பவர் தான். ஒரு காலத்தில் நாடகக் கம்பெனி ஒன்றில் சாதாரண சில்லரை நடிகராக இருந்த அவர் தமது சுயமுயற்சியாலும், சலியாத உழைப்பாலும் அவ்வளவு பெரிய நாடகக் கம்பெனியை உண்டாக்கியவர். ஆனால் கோபாலனுக்கு மயக்க மருந்து ஊட்டிய விஷயமாக நடிகர்களிடையே ஏற்பட்ட பிரிவையும் மனஸ்தாபத்தையும் நீக்க உடனே அவர் முயற்சி செய்தாரில்லை.

கோபாலனும் அவனுடைய சகாக்களும் கலந்து பேசி மணிதான் இந்த விஷத்தனமான காரியத்தைச் செய்தது என்று நிச்சயித்து, அவன் கோபாலனிடம் மன்னிப்புக் கேட்காவிட்டால் தாங்கள் கும்பலாக வெளியேறிவிட வேண்டுமென்று அந்தரங்கத்தில் முடிவு செய்திருந்தார்கள்.

முதலியாருக்கும் மணிதான் இந்த காரியத்திற்குப் பொறுப்பாளி என்பதை உடனே தெரிந்துகொண்டுவிட்டார். அவனைச் சரியானபடி கண்டிக்க வேண்டுமென்று நிச்சயித்திருந்தார்; ஆனால், தனக்குக் கீழுள்ள நடிகர்கள் ஒன்று சேர்ந்து கொள்வதும், உத்தரவு போடுவதைப் போல ஒன்றைத் தன்னிடம் சொல்லுவதும் அவருக்கு அடியோடு பிடிக்கவில்லை. இதனால் இரண்டு நாள் சுணங்கிற்று. அவர் கோபமாக இருந்ததால் சாரதையும் அவரிடத்தில் பேச்சுக்கொடுக்க அஞ்சினாள். "இதை விசாரிக்க வேண்டியது அவசியம்; ஆனால் நாடகங்களை நிறுத்த வேண்டாம்" என்றுவது அவர் நடிகர்களைச் சமாதானப் படுத்தினாரில்லை. மணி தன் மருமகன்

என்பதனால் முதலாளி பட்சபாதமாக நடந்துகொண்டார் என்று கசப்படைந்த நடிகர்கள் தாங்கள் தீர்மானித்த படியே கிளம்பிப் போய்விட்டார்கள். தான் செய்த காரியம் இவ்வளவு கேடாக முடிந்ததைக் கண்ட மணி யாருக்கும் தெரியாமல் கம்பி நீட்டிவிட்டான்.

கோபாலன் போனபின்புதான் தன் மனம் அவனிடத்தில் எவ்வளவுதூரம் ஈடுபட்டுவிட்ட தென்பதை சாரதை அறிந்துகொள்ள முடிந்தது. இந்தமாதிரி முடியும் என்று அவள் நினைக்கவே இல்லை. அவள் மனம் மிகவும் சோர்வடைந்து போயிற்று.

முதலியாரும் வெறுப்படைந்து மேற்கொண்டு சபாவை ஒன்றுப்படுத்த முயற்சிக்கவில்லை. மீதியுள்ள நடிகர்கள் கணக்கைத் தீர்த்துச் சம்பளத்தைக் கொடுத்தார். நாடகச் சாமான்களைத் திருநெல்வேலி டவுனில் அப்போது ஆடிக்கொண்டிருந்த ஒரு 'பாய்ஸ்' கம்பெனிக்கு விற்று விட்டுத் தம் குமாரியோடு சென்னைக்கு வந்து வசிக்கலானார்.

நாடகக் கம்பெனியோடு ஊர் ஊராகச் சுற்றிய முதலியாருக்கு இதுவரை சாரதையின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நாடகத்தின் மேலிருந்த மோகத்தினாலும் அதிலிருந்து கிடைத்த கொள்ளை வருமானத்தினாலும் சாரதையை மேடையில் நடிக்க விட்டிருந்தார். இப்பொழுதுதான் குழந்தைக்குச் செய்ய வேண்டிய கடமையை தாம் இதுவரை புறக்கணித்துவிட்டதாக வருந்தினார்.

இதோடு சென்னைக்கு வந்ததிலிருந்து அவருக்கு ஆரோக்கியம் குறைந்து பலஹீனம் அதிகரித்து வந்தது. மேலும் காலத்தைக் கடத்தாமல் சாரதைக்குக் கலியாணம் செய்துவிட வெகு தீவிரமாய்ச் சிந்தித்துக்கொண்டிருந்தார். சாரதை தன் மனதிற்குவந்த யாரையாவது செய்து கொள்ளட்டும். அவள் விரைவில் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்பதுதான் அவர் கவலை.

முதலியார் இவ்வளவு கவலையடைந்ததற்கு வேறு காரணமும் ஒன்று இருந்தது. அது, சாரதை கலியாணப்

பேச்சு எடுக்கும்போதெல்லாம் அதற்கு நேர்முகமாக பதில் சொல்லாததுதான். கோபாலன் மறைந்துவிட்டதி லிருந்து அவள் மனதில் கல்யாணத்தைப் பற்றிய எண்ணம் உலர்ந்து போயிருந்தது. எங்கேயாவது சினிமாவில் அவன் சேர்ந்துகொண்டிருப்பான் என்று பத்திரிகைகளை யெல்லாம் துருவித்துருவிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் பெயர் தட்டுப்படவே இல்லை.

நாகராஜ முதலியாரும் சாரதையும் சென்னை வந்து சேர்ந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. சென்னையில் அவருக்குக் கிடைத்த நண்பர்களில் 'நவபாரத ஸ்டூடியோ'வின் சொந்தக்காரரான ராமானுஜ முதலியார் மிகவும் நெருங்கியவரானார். முதலியார் அவரிடத்திலும் தன் மனக் கவலையை வெளி யிட்டு, சாரதை ஒரு பதிலும் சொல்லாமலிருப்பதையும் சொன்னார்.

ராமானுஜத்தின் முதல் தாரம் ஒரு பெண் குழந் தையை மட்டும் விட்டுவிட்டு இறந்துபோய் ஆறு வருஷங் கள் ஆயின. இதுவரை அவர் தமது மறு கல்யாணத்தைப் பற்றி நினைக்கவில்லை. சாரதையின் கலியாண விஷயததை நாகராஜ முதலியார் அவரிடம் வெளியிட்டதிலிருந்து அவர் மனம் சாரதையை நாடியது.

சாரதை ராமானுஜமிடத்தில் சரளமாய்ப் பழகி வந்தாள். அவருடைய பெருந்தன்மையான குணங்கள் அவளை வசீகரித்தன என்று சொல்லலாம். படங்களைப் பற்றியும், நடிப்பைப் பற்றியும் அவரிடத்தில் அடிக்கடி உற்சாகத்தோடு விவாதிப்பாள். "நம்முடைய படங்களில் எந்த அம்சம்தான் சிறந்திருக்கிறது? மேல் நாட்டுச் சிறந்த படங்களோடு நிகராக ஒரு படம் உண்டா? படத் தின் வெற்றிக்குப் பாதிகாரணம் கதைதான். எங்கள் நாடக சபா இருந்தபோது அப்பாவிடம் அடிக்கடி இதைத்தான் வற்புறுத்திச் சொல்லி வந்தேன். சமூக நாடகங்களில் நான் சந்தோஷத்தோடு நடிப்பேன். புராண நாடகங்கள் என்றால் எனக்கு எப்போதுமே பிடிக்காது."

"புராண கதைதான் நம் ஜனங்களுக்குத் தெரிந்திருக்கிறது, கதைப் போக்கைச் சுலபமாகப் புரிந்து ரஸிக்கிருர்கள். படம் தயாரிக்கிறவர்களுக்கும் கையைக் கடிக்காது."

"இல்லவே இல்லே. இது உங்கள் தப்பான எண்ணம். நல்ல சமூகக் கதைகளே எழுதுவித்துப் படம் தயாரிக்கப் போதிய சிரமம் எடுக்க முடியவில்லே என்று ஒப்புக் கொள்ளுங்களேன்? அப்படியானல் ஜனங்களேப் பழமையிலேயே அமிழ்த்தி வைப்பதுதான் உங்கள் தொண்டு, இல்லேயா? ஜனங்களுக்கு நவீன கதைகளில்தான் விருப்பம். கேளுங்கள். திருச்சியில் 'பால்ய விவாஹம்;' என்று ஒரு நாடகம் நடத்திேனம். நான் நடித்த முதல் நாடகம் அது! நான்தான் பால்ய மணப்பெண். மணவறையில் தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந்த நான் சற்று நிமிர்ந்து பார்க்கிறேன். என்ன கூட்டம் என்கிறீர்கள்! சொல்லி முடியாது! அவ்வளவு கூட்டத்தை நான் எப்போதுமே பார்த்ததில்லே. மேடையில் கல்யாண கோலாகலமோ தத்ரூபம். ஆ! அந்த நாள் எப்போ வரப்போகிறது. நான் எங்கள் சபா இருக்கும்போது எவ்வளவு உத்ஸாகமாக இருந்தேன்!.........."

சாரதை மனதில் திரையில் நடிக்க வேண்டுமென்று ஆவல் அதிகரித்து வருவதை ராமானுஜம் அறிவார். எனவே, அவர், ஒரு நாள், "ஏன், சாரதா, இப்போது என்ன? நல்ல கதை ஒன்றில் நீ நடிப்பதுக்கென்ன?" என்ருர்.

"அப்பாதான் நான் நடிப்பதை அடியோடு வேண்டாம் என்கிருரே."

"அப்பாவுக்கு நீ நடிப்பதில் ஆக்ஷேபனே இல்லே. நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்றுதான் கவலேப் பட்டுக்கொண்டிருக்கிருர்."

சாரதை முகத்தில் நாணம் படர்ந்தது.

இன்னெரு நாள் இவ்விதம் அவர்கள் வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் ராமானுஜம் மிகவும் தயக்கத்தோடு தன் மனேபீஷ்டத்தை சாரதையிடம் வெளி

யிட்டார். அவர் இப்படிக் கேட்பார் என்று சாரதை கொஞ்சமும் எதிர்பார்த்தவளல்ல. எதிர்பார்க்காத விஷயமாதலால் அவள் மனதில் திகைப்பும் சங்கடமும் ஏற்பட்டன.

அன்று இரவு சாரதை சஞ்சலத்தோடு படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். அவள் சிந்தனை ஒரு நிலையில் இல்லை. ராமானுஜத்திற்கு முப்பத்தைந்து வயதிற்கு மேல் இல்லைதான். அவருடைய குணங்களில் தோஷம் எதுவும் இருப்பதாகப் படவில்லை. நெடுநேரம் யோசித்தாள். தன் தந்தை மனவேதனையையும் எண்ணிப் பார்த்தாள். ராமானுஜம் மனதைத் திறந்து சொன்னதைத் தவிர, அசம்பாவிதமாய் ஒன்றும் நடந்துகொள்ளவில்லை!

தான் வரித்த கோபாலனை அடைய முடியவில்லை. வாழ்க்கைப்பாதை மலர்ப்பாதை அல்ல. மனிதர் நினைப்பது போல் நடப்பது எங்கேயோ ஆயிரத்தில் ஒன்றுதான். தந்தையோ தான் கன்னியாக இருப்பதை விரும்பவில்லை. கற்பனையில் ராமானுஜத்தை தன் அருகில் நிறுத்தி வைத்துப் பார்த்தாள். தன்னை அடைய ஆசைப்படுகிறார். தன் அபிப்பிராயங்களுக்கு இடம் கொடுக்கிறார். கலாரஸிகர் - செல்வந்தர் தந்தைக்கு உற்ற நண்பர்......

மறுநாள் காலையில் முதலியார் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது சாரதை தந்தையிடம், "அப்பா, உன் இஷ்டப்படியே நான் கல்யாணம் செய்துகொள்கிறேன். நாளுக்கு நாள் நீ இதை நினைத்துதான் இப்படிப் போகிறாய். ராமானுஜத்தைக் மணந்து கொள்கிறேன். அவர் அந்த எண்ணத்தை வைத்துக்கொண்டு உன்னிடம் சொல்ல முடியாமல் சங்கடப்படுகிறார்," என்றாள்.

முதலியாருக்குச் சாரதையின் வார்த்தைகள் மிக ஆச்சரியத்தைக் கொடுத்தது. 'பெண்கள் மனதை அறிய முடியாது என்று சொல்லுகிறார்களே, அது வாஸ்தவந்தான் போலிருக்கிறது,' என்று நினைத்துக்கொண்டு, நீர் மல்கும் கண்களோடு, "என் கவலை நீங்கிப்போச்சு; என் மீதிக்காலம் சந்தோஷமாய்க் கழியும்," என்றார்.

முதலியார் காலம் தாழ்த்தாமல், வெகு சீக்கிரத்தி லேயே ஒரு சுப முகூர்த்தத்தில் குறிப்பிட்ட நண்பர் களுக்கு மட்டும் அழைப்புவிட்டு, எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் சாரதைக்கும் ராமானுஜத்திற்கும் கல்யா ணத்தை நிறைவேற்றினர்.

'நவபாரத ஸ்டூடியோவில்' ராமானுஜம் பெரிய விருந்து ஒன்று ஏற்பாடு செய்திருந்தார். ஸ்டூடியோ தொழிலாளிகள் முதலாளியின் சம்சாரம் தேர்ந்த நடிகை என்றும் அடுத்த படத்தில் கதாநாயகியாக நடிக்கப் போகிருள் என்றும் தங்களுக்குள் பேசிக்கொண்டு அவளைப் பார்ப்பதற்கு வெகு ஆவலோடிருந்தார்கள்.

அழகான புதிய கார் ஒன்றில் சாரதையும் ராமானுஜ மும் வந்து இறங்கினர்கள். ஸ்டூடியோ டைரக்டர், காமெராமென், ஆர்ட் டைரக்டர் முதலியவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தார்களுக்கும் ராமானுஜம் சார தையை அறிமுகம் செய்து வைத்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில்தான் சாரதை கனவிலும் நினைக்காத சம்பவம் நிகழ்ந்தது. அவள் மன வெளியில் உலாவிக் கொண்டிருந்த கோபாலனும் விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்தான். அவனிடத்தில் ராமானுஜம் சாரதையை அறிமுகம் செய்து வைக்கலானர்; "சாரதா, இவர்தான் இப்போது நீ நடிக்கப்போகும் நமது படமான 'வாழ்க்கைப்பாதை' என்ற கதையை எழுதியவர் 'நல்ல கதை வேண்டும், நல்ல கதை வேண்டும்' என்று சொல்வாயே ரொம்பவும் நல்ல கதை இது. அவரே கதாநாயகனுக நடிக்கப்போகிருர்......' என்ருர்.

சாரதையின் கண்முன் தோன்றியவை எல்லாம் கறங்குபோல் சுழலவாரம்பித்தன.

வாழ்க்கைப்பாதையில் இப்போது அவர்கள் எதிரும் புதிருமாக நிறுத்தப்பட்டார்கள்!

2084226

உயர்ந்த ஜவுளிகளுக்கு
ராதா
ஸில்க் எம்போரியம்
மைலாப்பூர், சென்னை
ஸுபா,

குடும்பஸ்திரீகளுக்கு ஏற்றது

P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கடை வீதி ஸ்வர்ணமாளிகை கோயமுத்தூர்

போன். ௨௬௪.

BALU BROS

Printed at the Commercial Printing & Publishing House, Madras. 1
P. I. Card Q.H. No. M/S 120 A. For M/s Basaras Karyalayam
P. I. Card Q.H. No. MS 409